**CROWN PRINTERS**

*70, Alwar Street, New Road.*

**KOVILPATTI - 627 701.**

## இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் அன்பின் வாழ்த்துக்கள்

ஏறக்குறைய *7* ஆண்டுகளாக பல இடங்களிலிருந்து சேகரித்த சுமார் *200* ஆண்டுகளுக்கு முன்பு வரை அச்சடிக்கப்பட்ட, ஆரோக்கிய உபதேசங்கள் அடங்கிய, கிறிஸ்தவ ஆவிக்குரிய புத்தகங்களை, பல மணி நேரம் கொடுத்து, பல இலட்சங்கள் செலவு செய்து மின் நூல்களாக *(E-Books)* இலவசமாக (மத்தேயு *10:8*) உங்கள் கரங்களில் கொடுப்பதற்கு, அற்பரும் நீசருமான எங்களை பயன்படுத்தின உன்னத தேவனுக்கே சகல கனமும் மகிமையும் துதியும் உரித்தாவதாக. இதைப் போன்ற இன்னும் ஆயிரக்கணக்கான புத்தகங்களை தரவிறக்கம் *(Download)* செய்ய எங்களுடைய இணையதளத்தை சொடுக்கவும்/பார்க்கவும்: *www.WordOfGod.in*

*95* சதவீத புத்தகங்கள் அச்சில் இல்லாதவைகளும், காப்புரிமை முடிந்தவைகளுமே. மீதமுள்ள புத்தகங்கள், நல்ல உபதேசங்களை கொண்டிருப்பதால், முடிந்தவரை ஆசிரியரின் உரிமையோடு மின்-நூலாக, இலவசமாக வெளியிடுகிறோம். ஒருவேளை உங்களுடைய புத்தகம் இப்படி இலவசமாக மின்-நூல் *(E-Book)* வடிவில் வரக்கூடாது என்று நினைத்தீர்களானால், தயவு செய்து எங்களை மன்னித்துக்கொள்ளுங்கள். எங்களுடைய *WhatsApp* எண்ணிற்கோ, மின் அஞ்சலிலோ *(Email)* எங்களுக்கு தெரியப்படுத்துங்கள். உடனடியாக எங்களுடைய இணைய-தளத்திலிருந்து எடுத்துவிடுகிறோம்.

*WhatsApp/SMS: +91 90 190 490 70 / +91 7676 50 5599*

*Email: wordofgod@wordofgod.in*

## *Wishing you in the mighty name of Jesus Christ*

*We had collected several thousands of old Tamil Spiritual Books which are rich in Sound Doctrines across various places of India for 7 years. Some of them are more than 200 years old books. We have spent millions of hours and money in scanning them and coverting them to E-Books. The work is still in progress. These E-books are published completely free of cost (Matt 10:8) forever. We give all the praise and glory to God for giving this wonderful opportunity to server Him. You can download thousands of similar Tamil Christian E-books from our website www.WordOfGod.in completely free of cost at any time.*

*95% of these E-Books are not being printed now and their copyrights are already expired. The remaining books are sent as E-Books mostly with the permission from the Authors. If you feel that your books should not be published as E-Book freely, kindly execuse and forgive us. Please let us know the book details by WhatsApp or Email we will remove them from our website.*

*WhatsApp/SMS: +91 90 190 490 70 / +91 7676 50 5599*

*Email: wordofgod@wordofgod.in*

இரட்சிப்பின்

# ஸ்தோத்திரக் கீதங்கள்



# 100 ஆண்டு நிறைவு விழா

## இரட்சிப்பின்

# ஸ்தோத்திரக் கீதங்கள்

**பரி. அந்திரேயா ஆலயம்**

வடக்கு வாகைக் குளம்

உக்கிரமன்கோட்டை சேகரம்

கர்த்தரைத் துதியுடன் பாடிக் கொண்டாடுங்கள் சங் 147:7

1981

# அட்டவணை


| | |
|---|---|
| அதிசயமான ஒளிமய நாடாம் | 45 |
| அடர்ந்த மரங்களின் நடுவில் | 11 |
| அல்லேலூயா கர்த்தரையே ஏகமாய் | 2 |
| அல்லேலூயா ஜெயம் அல்லேலூயா | 46 |
| அல்லேலூயா தேவனுக்குத் துதி மகிமையே | 118 |
| அன்பரே கூடுங்கள் ஆனந்தம் | 32 |
| அழைக்கிறார் அழைக்கிறார் இதோ | 35 |
| அழைப்பின் குரல் கேட்டேன் | 40 |
| அலைந்தேன் உலகிலே—அறியாத இடம்தேடி | 85 |
| அனைத்தையும் வெல்பவர் கிறிஸ்து | 96 |
| அனைத்திலும் உயர்நெறி | 106 |
| ஆதாரம் நீதான் ஐயா என் துரையே | 27 |
| ஆசீர் வதியும் கர்த்தரே ஆனந்தமிகவே | 53 |
| ஆசீர்வாதம் வேணும் ஆவியான ஜீவ தேவ | 114 |
| ஆண்டவா பிரசன்னமாகி | 58 |
| ஆட்கொள்வீர் தேவா நீரே | 72 |
| ஆயிரம் ஆயிரம் பாடல்களை | 119 |
| இதோ மனுஷரின் மத்தியில் | 1 |
| இந்த அருள் காலத்தில் | 56 |
| இன்றே நீ என்னுடன் இருப்பாய் | 60 |
| இருள் சூழும் காலம் இனி வருதே | 71 |
| இயேசு கிறிஸ்துவின் நல் சீடராகுவோம் | 101 |
| இயேசு மீட்பர் உந்தன் நெஞ்சில் | 31 |
| இயேசுவின் நாமம் இனிதான நாமம் | 25 |
| இயேசுவின் நாமத்தில் ஆனந்திப்பேன் | 50 |
| இயேசுவின் நாமத்தில் கூடி வந்தோம் | 88 |
| இயேசுவின் குடும்பம் ஒன்று உண்டு | 102 |
| இயேசுவே மணாளனே | 14 |
| இராஜாதி இராஜன் இயேசு | 39 |
| இஸ்ரவேலென் ஜனமே என்றும் இடறிட வேண்டாம் | 80 |
| உத்தமமாய் முன் செல்ல உதவி செய்யும் | 121 |
| உந்தன் சிநேக வாக்குகள் | 51 |

| | |
|---|---|
| உன்னத தேவன் உன்னை | 29 |
| உன் புகழைப் பாடுவது என் | 9 |
| உள்ளமெல்லாம் உருகுதையா | 100 |
| உள்ளத்தில் அவர் பால் பேரன்புள்ளோரெல்லாம் | 116 |
| உலகம் உன் சதமென்று எண்ணி | 33 |
| உலகோர் உன்னை பகைத்தாலும் | 32 |
| உம்மைப் போல் யாருண்டு | 110 |
| எனக்காய் ஜீவன் விட்டவரே | 23 |
| என் ஆத்தும நேசர் இயேசுவை | 75 |
| என்னை ஆளும் இயேசு நாதா | 45 |
| என் இயேசுவின் சந்நிதியில் -- என்றும் | 89 |
| என் தேவனாகிய கர்த்தாவே | 82 |
| என் தேவன் என் வெளிச்சம் | 68 |
| எந்தன் இயேசு எனக்கு நல்லவர் | 98 |
| எந்தன் நாவில் புதுப்பாட்டு | 22 |
| எந்தன் உள்ளம் தங்கும் | 12 |
| எந்தன் உள்ளம் புதுகவியாலே | 18 |
| எம் உயர்ந்த வாசஸ்தலமதுவே | 81 |
| எல்லா வரமும் நிரம்பித்ததும்பும் | 41 |
| எழுப்பிடுவீர் ஒ வாலிபரே | 115 |
| எண்ணிலடங்கா ஸ்தோத்திரம் | 104 |
| ஏதேனில் ஆதிமணம் | 52 |
| ஏலி ஏலி லாமா சபக்தானி | 62 |
| ஐயோ என் செல்வன் சீரான | 61 |
| ஒரேவழி எந்தன் இயேவின் வழி | 90 |
| காலத்தின் அருமையை அறிந்து | 37 |
| காப்பார் உன்னை | 117 |
| கர்த்தரின் கை குறுகவில்லை | 73 |
| கர்த்தர் உன் வீட்டை கட்டாராகில் | 24 |
| கர்த்தர் என் மேய்ப்பரே | 67 |
| கல்வாரி நாயகா—கருணையின் வடிவம் தேவா! | 83 |
| கிருபை கிருபை கிருபை பொழிவீர் | 93 |
| கொடு உனக்கு கொடுக்கப்படும் | 78 |
| கோடா கோடி தோத்ரம் | 6 |
| சந்தோஷ கீதம் என்னில் | 70 |

| | |
|---|---|
| சாமி இவர்க்கிதை மன்னியும் | 59 |
| சுமை சுமந்து சோர்ந்திருப்போரே | 84 |
| தாசரே இத்தரணியை அன்பாய் | 36 |
| தாகம் தீர்க்கும் ஜீவநதி | 120 |
| தாகமானீரோ இயேசு தற்பரா | 63 |
| துதிப்பதே என் தகுதியல்லோ | 108 |
| தொல்லைகள் கஷ்டங்கள் சூழ்ந்திடும் | 77 |
| தேசமே பயப்படாதே | 92 |
| தேவ சேனை வான மீது கோடி கோடியாகத் தோன்றும் | 109 |
| தேவபிதா எந்தன் மேய்ப்பன் அல்லோ | 49 |
| தேவனின் ஆலயமே பரிசுத்த ஆலயமே | 103 |
| தேவதேவனை ஏகமாய் நாம் | 3 |
| தேவனைத் துதியுங்கள், நம் தேவனைத் துதியுங்கள் | 87 |
| தேவாதி தேவனே | 113 |
| தேடுங்கள் கண்டடைவீர் | 44 |
| தோத்திரம் செய்வோமே | 8 |
| திருப்பாதம் நம்பி வந்தேன் | 20 |
| துதித்துப்பாடிடப் பாத்திரமே | 66 |
| தூய ஆவியானவர் இறங்கும் | 69 |
| நம் தேவன் அன்புள்ளவர் நம் தேவன் பரிசுத்தர் | 107 |
| நான் பாவ சேற்றினிலே வாழ்ந்தேன் | 19 |
| நாற்பது நாள் ராப்பகல் | 57 |
| நாளை நடப்பதை அறிய நண்பரே | 21 |
| நெஞ்சே நீ கலங்காதே-சீயோன் | 28 |
| நேற்றும் இன்றும் என்றும் மாறாதவர் | 48 |
| நேசரன்பைப் பாடுவது தனி இன்பமே | 111 |
| பலிபீடத்திலென்னைப் பரனே | 42 |
| பாடுவேன் அல்லேலூயா | 97 |
| பாவி எனக்காகவே ஜீவனைக் | 10 |
| பாடுவேன் பாடல் கர்த்தருக்காக | 112 |
| பார் பார் பார் தேவ ஜீவன் | 65 |
| பிளவுண்ட மலையே | 55 |
| புத்திக் கெட்டாத அன்பின் வாரி பாரும் | 86 |
| புதிய கிருபை அளித்திடுமே | 105 |

| | |
|---|---|
| மகிழ்வோம் மகிழ்வோம் தினம் அகமகிழ்வோம் | 79 |
| மகிழ்ந்திருவேன் நான் கர்த்தருக்குள் | 95 |
| மங்கள கீதங்கள் பாடுவோம் | 5 |
| மங்களம் செழிக்க கிருபை | 54 |
| மந்தையில் சேரா ஆடுகளே | 13 |
| மான்கள் நீரோடை வாஞ்சித்து | 74 |
| முடிந்த தென்றீரே ஐயா | 64 |
| மீட்பர் இயேசுவே — கோரச் | 94 |
| முன்னேறிச் செல்வீர் - பின் நோக்காமலே | 91 |
| யாரிடம் செல்வோம் இறைவா | 26 |
| யேசு நாமம் பாட பாட | 47 |
| யேகோவாயீரே - பார் | 16 |
| வழி நடத்தும் வல்ல தேவன் வாழ்வில் நாயகனே | 76 |
| வாலிப நாளில் உன் தேவனைத் | 30 |
| வாருமையா போதகரே | 7 |
| விதைப்பும் அறுப்புமே | 17 |
| ஸ்தோத்திரம் இயேசு நாதா | 4 |
| ஜெயம் ஜெயம் அல்லேலூயா | 34 |
| ஜீவனுள்ள தேவனே | 15 |

# இரட்சிப்பின் தோத்திரக் கீதங்கள்

**1**

இதோ மனுஷரின் மத்தியில் தேவாதி தேவன்
வாசஞ் செய்கிறுரே

## சரணங்கள்

1. தேவன் ஸ்தாபரிக்கும் ஸ்தலமே
தம் ஜனத்தாரின் மத்தியிலாம்
தேவன் தாம் அவர்கள் தேவனுயிருந்தே
கண்ணீர் யாவையும் துடைக்கிருரே — இதோ

2. தேவ ஆலயமும் அவரே
தூய ஒளி விளக்கும் அவரே
ஜீவனுலே தம் ஜனங்களின் தாகம் தீர்க்கும்
சுத்த ஜீவ நதியும் அவரே — இதோ

3. மகிமை நிறை பூரணமே
மகா பரிசுத்த ஸ்தலமதுவே
என்றும் துதியுடனே அதன் வாசல் உள்ளே
எங்கள் பாதங்கள் நிற்கின்றதே — இதோ

4. சீயோனே உன் வாசல்களை
ஜீவ தேவனே நேசிக்கிருர்
சீர் மிகுந்திடுமிச் சுவிசேஷந்தனை
கூறி உயர்த்திடுவோம் உனையே — இதோ

5. முன்னேடியாம் இயேசு பாலன்
மூலைக்கல்லாகிச் சீயோனிலே
வாசஞ் செய்திடும் உன்னத சிகரமதை
வாஞ்சையோடு நாம் நாடிடுவோம் — இதோ

**2**

அல்லேலூயா கர்த்தரையே ஏகமாய்த் துதியுங்கள்
அவர் நடத்தும் செயல்களெல்லாம் பார்த்தோரே துதியுங்கள்
வல்லமையாய்க் கிரியை செய்யும் வல்லோரைத் துதியுங்கள்
எல்லோரையும் ஏற்றுக்கொள்ளும் இயேசுவைத் துதியுங்கள்

ராஜாதி ராஜனும் இயேசு ராஜன்
பூமியில் ஆட்சி செய்வார்
அல்லேலூயா, அல்லேலூயா
தேவனைத் துதியுங்கள்

2. தம்புரோடும் வீணையோடும் கர்த்தரைத்துதியுங்கள்
இரத்தத்தினால் பாவங்களைப் போக்கினார் துதியுங்கள்
எக்காளமும், கைத்தாளமும் முழங்கிடத் துதியுங்கள்
எக்காலமும் மாறாதவர் இயேசுவைத் துதியுங்கள் — ராஜாதி

3. சூரியனே, சந்திரனே தேவனைத் துதியுங்கள்
ஒளியதனை எங்களுள்ளம் அளித்தோரைத் துதியுங்கள்
அக்கினியே கல்மழையே படைத்தோரைத் துதியுங்கள்
அக்கினியாய் கல்மனதை உடைப்போரைத் துதியுங்கள்
— ராஜாதி

4. பிள்ளைகளே, வாலிபரே தேவனைத் துதியுங்கள்
வாழ்வதனை அவர் பணிக்கே கொடுத்து நீர் துதியுங்கள்
பெரியவரே, பிரபுக்களே தேவனைத் துதியுங்கள்
செல்வங்களை இயேசுவுக்காய் செலுத்தியே துதியுங்கள்
— ராஜாதி

5. ஆழ்கடலே, சமுத்திரமே தேவனைத் துதியுங்கள்
அலையலையாய் ஊழியர்கள் எழும்பினார் துதியுங்கள்
தூதர்களே, முன்னோடிகளே தேவனைத் துதியுங்கள்
பரலோகத்தை இந்தியர்கள் நிரப்புவார் துதியுங்கள்
— ராஜாதி

——

3

தேவ தேவனை ஏகமாய் நாம் பாடி போற்றிடுவோம்
இயேசுவின் நாமத்தினால்
பாவரோக சாபம் நீங்கவே
விடுதலையும் அடைந்தோம் - என்றென்றுமாய்

## சரணங்கள்

1. உலகம் தரக்கூடா சமாதானமும்
சந்தோஷமும் தந்தார் இயேசு ராஜன்
மண்ணுலகில் ஜீவித்தாலும்
விண்ணுலகின்பத்தை அனுபவிக்க
இந்த நல் பாக்கியம் ஈந்தாரே — தேவ

2. துன்பமோ துக்கமோ தொல்லைகளோ
தொடர்ந்து வந்தாலும் திகிலடையோம்
சீயோனின் அரண்களைப் போல்
அசையாது நாம் வாழ்ந்திடுவோம்
சேனையதிபன் நம்மோடிருக்க — தேவ

3. எரிகோவைப் போல் பல எதிர்ப்புகளும்
எழும்பி வந்து நம்மைத் தடுத்தாலும்
முன் வைத்த காலைப் பின் வைப்பீரோ
வாலிபரே இப்போர் முனையில்
வல்லமையோடவரைத் துதிப்போம் — தேவ

4. மாமிச சிந்தையால் ஆவியிலே
மரணமும் விழுகையும் நேர்ந்திடுமே
பயப்படுவீர் நீர் பயப்படுவீர்
பட்சிக்கும் தேவன் நம்மில் இருக்க
பரிசுத்த சிந்தையில் பலப்படுவீர் — தேவ

---

4

ஸ்தோத்திரம் இயேசு நாதா உமக்கென்றும் ஸ்தோத்திரம் இயேசு நாதா
ஸ்தோத்திரம் செய்கிறோம் நின்னடியார்
திரு நாமத்தின் ஆதரவில்

2. வான தூதர் சேனைகள் மனோகரகீதங்களால் எப்போதும்
ஓய்வின்றிப் பாடி ஸ்துதிக்கப்பெறும்
மன்னவனே உமக்கு

3. இத்தனை மகத்துவமுள்ள பதவி இவ்வேழைகள் எங்களுக்கு
எத்தனை மாதயவு நின் கிருபை
எத்தனை ஆச்சரியம்

4. நின் உதிரமதினால் திறந்தநின் ஜீவ புது வழியாம்
நின் அடியார்க்குப் பிதாவின் சந்நிதி
சேரவுமே சந்ததம்

5. இன்றைத் தினமதிலும் ஒருமித்துக் கூட உம் நாமத்தினால்
தந்த நின் கிருபைக்காக உமக்கென்றும்
ஸ்தோத்திரம் ஸ்தோத்திரமே

6. நீரல்லால் எங்களுக்குப் பரலோகில் யாருண்டு ஜீவ நாதா
நீரேயன்றி இகத்தில் வேறேயொரு
தேட்டமில்லை பரனே

**5**

மங்கள கீதங்கள் பாடிடுவோம்
மணவாளன் இயேசு மனமகிழ
கறை திரை நீக்கி திருச்சபையாக்கி
கர்த்தன் கற்பித்த கன்னிகையாய்

தோத்திரமே யூதாக கூட்டமே
தோத்திரமே துதி சாற்றிடுவோம்
புழுதியினின்றெம்மை உயர்த்தினரே
புகழ்ந்தவர் நாமத்தை போற்றிடுவோம்

2. இராஜ குமாரத்தி ஸ்தானத்திலே
இராஜாதி ராஜன் பக்கத்திலே
இனஜனநாடு தகப்பனின் வீடு
இன்பம் மறந்து சென்றிடுவோம்

3. சித்திர தையலுடை அணிந்தே
சிறந்த உள்ளான மகிமையிலே
பழுதொன்றுமில்லாப் பரிசுத்தமான
பாவைகளாகப் புறப்படுவோம்

4. ஆரங்கள் பூட்டி அலங்கரித்தே
அவர் மணவாட்டியாக்கினரே
விருத்தறை நேசக்கொடி ஒளி வீச
வீற்றிருப்போம் சிங்காசனத்திலே

5. தங்கத்தினால் செய்த மாளிகையில்
தயாபரன் இயேசு புறப்படுவார்
மகிழ் கமழ் வீச மகத்துவ நேசர்
மன்னன் மணவன் வந்திடுவார்

---

5

கோடா கோடி தோத்ரம் ஏறெடுப்போம்
இராஜாதி ராஜன் தேவாதி தேவன்
இயேசு கிறிஸ்துவுக்கே மகிமை — (2)

1. பரிசுத்தவான்கள் சபை நடுவே
தரிசிக்கும் தேவ சமூகத்திலே
அல்லேலூயா அல்லேலூயா
ஆவியில் பாடி மகிழுவோம்
ஆண்டவர் இயேசுவைக் கொண்டாடுவோம் (2)

2. கிருபாசனத்தண்டை நெருங்குவோம்
திருரத்தம் கரத்தில் ஏந்தி நிற்போம்
அல்லேலூயா அல்லேலூயா
கண்டேன் சகாயம் இரக்கமே
கர்த்தர் கிருபை என்றுமுள்ளதே (2)

3. குருவி பறவை வானம்பாடியே
கவலையின்றிப் பறந்து பாடுதே
அல்லேலூயா அல்லேலூயா
அற்புதமான சிருஷ்டிகரே
அந்த விசுவாசம் கற்றறிந்தோம் (2)

4. கவலைப்படாதிருங்கள் என்றுரைத்தீர்
காட்டுப் புஷ்பத்தை உடுத்துவித்தீர்
அல்லேலூயா அல்லேலூயா
ஆடை ஆகாரம் தேவை எல்லாம்
அன்றன்று தந்தெம்மை ஆதரித்தீர் (2)

5. கணக்கில்லா நன்மைகள் கர்த்தர் செய்தார்
கருத்துடன் பாடி நன்றி கூறுவோம்
அல்லேலூயா அல்லேலூயா
தேவகுமாரன் வந்திடும் நாள்
தூயமுகம் கண்டு கெம்பீரிப்போம் (2)

## 7

1. வாருமையா போதகரே வந்தெம்மிடம் தங்கிடும்
சேருமையா பந்தியினில் சிறியவராம் எங்களிடம்

2. ஒளிமங்கி இருளாச்சே உத்தமனே வாருமையா
களித்திரவு காத்திருப்போம் காதலினை கருணை செய்வாய்

3. ஆதரையிலெம் ஆரநதலே அன்பருக்குச் சதா உறவே
பேதையர்க்குப் பேரறிவே பாதை மெய்ஜீவ சற்குருவே

4. நாமிருப்போம் நடுவிலென்றீர் நாயகனுன் நாமம் நமஸ்கரிக்க
தாமதமேன் தயைபுரிய தற்பரனே நலம் தருவாய்

5. அமர்ந்திடுவீர் ஆசனத்தில் எடுத்திடுவீர் போஜனத்தில்
ஆசீர்வதித்தீந்திடுவீர் அன்புடனே அடியாருக்கு

6. உள்ளமெல்லாம் உருகுதையோ உத்தமனை நினைக்கையிலே
மன்னவனார் வார்த்தைகளை மறைக்கவுமோ முடியுதில்லை

7. உந்தன்மனை திருச்சபையை வையமெங்கும் வளர்த்திடுவாய்
பந்த மற பரிகரித்தே பாக்கியமளித் தாண்டருள்வாய்

---

## 8

தோத்திரம் செய்வோமே தோத்திரம் செய்வோமே
கல்வாரியின் அன்பின் நாதனை என்றும் தோத்திரம் செய்வோமே

1. பாவியாம் எமைமீட்ட நேசனே
அன்பாலே உள்ளம் பொங்கியே
என்றும் தோத்திரம் செய்வோமே

2. நீதியின் பாதையில் நித்தம் நடத்துவோனே
நீதிபரனே நித்தமும் நாமும்
தோத்திரம் செய்வோமே

3. அன்பின் உருவோனே ஆற்றல் உடையோனே
அல்லேலூயா கீதங்கள் பாடி
தோத்திரம் செய்வோமே

---

**9**

1. உன் புகழைப் பாடுவது என் வாழ்வின் இன்பமையா
உன்னருளைப் போற்றுவது என் வாழ்வின் செல்வமையா

2. துன்பத்திலும் இன்பத்திலும் நல் தந்தையாய் நீயிருப்பாய் } 2
கண்ணயரக் காத்திருக்கும் நல் அன்னையாய் அருகிருப்பாய் } 2
அன்பு எனும் அமுதினை நான் அடைந்திட எனக்களிப்பாய்
உன்னின்று பிரியாமல் நீ என்றும் அணைத்திருப்பாய்

3. பல்லுயிரைப் படைத்திருப்பாய் நீ என்னையும் ஏன் படைத்தாய்
பாவத்திலே வாழ்ந்திருந்தும் நீ என்னையும் ஏன் அழைத்தாய்
அன்பினுக்கு அடைக்கும் தாள் ஒன்று இல்லையென்றுணர்ந்தேன்
உன் அன்பை மறவாமல் நான் என்றும் வாழ்ந்திருப்பேன்

---

**10**

பாவி எனக்காகவே — ஜீவனைக்கொடுக்க
பாரில் வந்தவரே — பாதை காட்டிடுமே

1. மேவியே என்னையும் தாவி அணைத்திடும்
மகிமையுள்ள ராஜனே
மேன்மையாய் என்னை — மாற்றி அமைக்க
கூவி அழைத்தவரே — ஆ ... ஆ ... — பாவி

2. நீசனும் என்னையும் நேசிக்கும் தூயன்
நிந்தையால் முகம் நொந்தார்
நித்தம் நான் செய்திடும் பாவங்களதினால்
மந்தை மடியலாமோ — ஆ ... ஆ ... — பாவி

3. எத்தனைக் கஷ்டங்கள் — எத்தனை தொல்லைகள்
அத்தனையும் கேட்டாய்
அத்தனைக் கேட்டும் ஆவலைப்பெற
இத்தனைத் தாமதமோ — ஆ — ஆ — —பாவி

4. பாதம் கழுவியே — சுத்தமாக்கியோனே
பாதத்தை மட்டுமல்ல
சிரமுதல் பாதம்வரைக்கழுவும் என
சீக்கிரம் வாராயோ — ஆ — ஆ — —பாவி

---

## 11

1. அடர்ந்த மரங்களின் நடுவில்
ஒரு கிச்சிலி இருக்கும் வண்ணமாய்
பரிசுத்தரின் நடுவில் காணுவேன்
அதி சிரேஷ்டமாய் இயேசுவையே

வாழ்த்துவேன் எந்தன் பிரியனை
ஜீவ காலமெல்லாம் இம்மாறு யாத்திரையில்
நன்றியோடே நான் பாடுவேன் (2)

2. பனி நீர் புஷ்பம் சாரோனின் ரோஜா } (2)
பள்ளத் தாக்கின் லீலி அவர்
பரிசுத்தரில் மா பரிசுத்தராம்
பரிபூர்ண நல் சௌந்தர்யரே — வாழ்த்துவேன்

3. ஊற்றுண்ட தைலம் போல் நின் நாமம்
பாரில் நறுமணம் வீசுதாம்
பழி, தூஷணம், நெருக்கங்களில்
என்னைச் சுகந்தமாய் மாற்றிட்டாரே —வாழ்த்துவேன்

4. மன கிலேச தருணம் வருங்கால
துக்க சாகரத்தில் மூழ்கும் வேளை
திருக்கரம் நீட்டி எடுத்தவரே
பயப்படவேண்டாம் என்றுரைத்தாரே —வாழ்த்துவேன்

5. திரு இதயம் இன்றே அருள்வாய்
நாதா நான் இப்போ வந்திடுவேன்
நான் இருப்பது இருந்த வண்ணம்
உந்தன் முன்னில் நான் நின்றிடுவேன் — வாழ்த்துவேன்

---

## 12

1. எந்தன் உள்ளம் தங்கும் இயேசு நாயகா
உந்தன் வீடாய் கொள்ளும் இயேசு நாயகா
இயேசு நாயகா இயேசு நாயகா
உந்தன் வீடாய் கொள்ளும் இயேசு நாயகா

2. மாம்ச கிரியை போக்கும் இயேசு நாயகா
குழந்தை உள்ளமாக்கும் இயேசு நாயகா
இயேசு நாயகா இயேசு நாயகா
குழந்தை உள்ளமாக்கும் இயேசு நாயகா

3. திரும்ப விழாது பாரும் இயேசு நாயகா
கிருபை யிழாது காரும் இயேசு நாயகா
இயேசு நாயகா இயேசு நாயகா
கிருபை யிழாது காரும் இயேசு நாயகா

4. என்னை உமக்குத் தந்தேன் இயேசு நாயகா
இனி நான் அல்ல நீரே இயேசு நாயகா
இயேசு நாயகா இயேசு நாயகா
இனி நான் அல்ல நீரே இயேசு நாயகா.

---

## 13

மந்தையில் சேரா ஆடுகளே
எங்கிலும் கோடி கோடி உண்டே
சிந்தையில் ஆன்ம பாரம் கொண்டே
தேடுவோம் வாரீர் திருச்சபையே
மந்தையில் சேரா ஆடுகளே

அழைக்கிறார் இயேசு
அவரிடம் பேசு
நடத்திடுவார்

1. காடுகளில் பல நாடுகளில்
என் ஜனம் சிதறுண்டு சாருவதா?
பாடுபட்டேன் அதற்காகவுமே
தேடுவோர் யார் என் ஆடுகளை!

2. சொல்லப்பட்டிராத இடங்கள் உண்டு
என்னை அங்கு சொல்ல இங்கு ஆட்கள் உண்டு
அழைப்பு பெற்றோர் யாரும் புறப்படுவீர்
இது ஆண்டவர் கட்டளை கீழ்ப்படுவீர்!

3. எனக்காய் பேசிட நாவு வேண்டும்
என்னைப் போல் அலைந்திட கால்கள் வேண்டும்
என்னில் அன்பு கூர ஆட்கள் வேண்டும்
இதை உன்னிடம் கேட்கிறேன் தர வேண்டும்.

---

**11**

1. இயேசுவே மணாளனே —என்
நம்பிக்கையின் தீபமே
என் ஆசை ஒன்று மாத்ரமே
விண் வீட்டில் உம்மைக் காண்பதே.

### பல்லவி

காணுவேன் காணுவேன்
நேசரை நான் காணுவேன்
அன்னிய கண்களாலே அல்ல
சொந்தக் கண்ணால் காணுவேன்.

2. கண்ணீரின் பள்ளத் தாக்கிலே
உம்மில் மறைந்தே வாழுவேன்
கண் மூடும் நொடி நேரத்தில்
சேர்வேன் நான் பியூலா தீரத்தில். —காணு

3. மேகம் எழும்பிச் செல்லுதே
கானானின் ஓரம் காணுதே
ஆசாபாசம் ஆரும் கட்டையே
அறுத்தெறிந்திடுவோமே. —காணு

4. மண்ணில் மறைந்த சுத்தரும்
மண் மீது வாழும் சித்தரும்
விண்ணில் எக்காளம் கேட்கையில் காணு
வேகம் செல்வாரே மேகத்தில்

5. உயிர்த்தெழும்பும் காலையி
தூதர் சங்கீதம் கேட்கையில்
தங்கக் கிரீடக் கூட்டத்தில்
என் பேரழைக்கும் நேரத்தில் காணு

6. என் ஓட்டமும் பிரயாசமும்
நான் காத்த என் விசுவாசமும்
வீணல்ல அது சத்தியம்
நேசரைக் காண்பேன் நித்தியம் காணு

---

## 15

ஜீவனுள்ள தேவனே வாரும்
ஜீவப் பாதையிலே நடத்தும்
ஜீவத் தண்ணீர் ஊறும் ஊற்றிலே
ஜீவன் பெற என்னை நடத்தும்

தேவனே நீர் பெரியவர் தேவனே நீர் பரிசுத்தர்
தேவனே நீர் நல்லவர் தேவனே நீர் வல்லவர்

1. பாவிகள் துரோகிகள் ஐயா
பாவ ஆகாம் மக்களே தூயா
பாதகர் எம் பாவம் போக்கவே
பாதகர் போல் தொங்கினீரல்லோ

2 ஐந்து கண்ட மக்களுக்காக
ஐந்து காய மேற்ற நேசரே
நொந்துருகி வந்து மக்கள் மேல்
நேச ஆவி வீசச் செய்குவீர்.

3. வாக்குத் தத்தம் செய்த கர்த்தரே
வாக்கு மாரு உண்மை நாதனே
வாக்கை நம்பி வந்து நிற்கிறோம்
வல்ல ஆவி மாரி ஊற்றுவீர்.

4. நியாயத் தீர்ப்பின் நாள் நெருங்குதே
நேசர் வரக் கால மாகுதே
மாயலோகம் நம்பி மாண்டிடும்
மானிடரை மீட்க மாட்டீரோ,

---

**16**

யேகோவாயீரே--பார் உருவாகுமுன்னரே
யாவுமெனக்காய் முடித்தீரே
கிறிஸ்து இயேசுவிலே-முன்
அறிந்து அழைத்தவரே

## சரணங்கள்

1. ஆபிரகாமுக்காய் தேவ பர்வதத்தில்
ஆயத்தமாக்கி நீர் வைத்ததோர் ஆட்டைப்போல்
தாயின் அகத்தில் யான் செயறைத் தோன்று முன்
தற்பரனே யாவும் கருதி வைத்தீர் யேகோ

2. கானகத்திலே என்னைப் பின் தொடர்ந்தே
ஞானக் கன்மலையால் தாகங்கள் தீர்ப்போரே
வான மன்னாவாயும் உம்மா றிடா வார்த்தையால்
மாற்றுகிறீர் மன்னனின் சாயலென்னில் — யேகோ

3. பாரிலென் கரங்கள் போரினில் ஜெயிக்க
நீரே உம் நித்திய புயத்தால் தாங்கியே
ஆனந்தத் தைலத்தால் என் உள்ளம்வழிய
அன்பரே நீர் அபிஷேகிக்கிறீர் — யேகோ

4. அன்பரே உம்மிலே அன்பு கூர்ந்தோருக்கு
ஆயத்தமாக்கிய அனந்த நன்மைகள்
கண்கள் கண்டதில்லை கேட்டறிந்ததில்லை
காண யான் ஆவியால் கருணை செய்தீர் — யேகோ

5. அந்த நாள் வரையும் எந்தனைக் காப்பீரே
எந்தையே உமக்காய்ச் சொந்தமாயளித்தேன்
சந்ததம் நிலைக்கும் சீயோன் பர்வதம் போல்
என்றும் கிருபையினுள் இருப்பேன் — யேகோ

---

**17**

விதைப்பும் அறுப்புமே
பூமியின் மீதினில்
மாறி மாறி வருமே
பகலும் இரவுமாய்
வருடங்கள் மாயமாய்
நழுவியே சென்றிடுமே

பல்லவி

சிந்திப்பீர், சிந்திப்பீர்
காலங்களைச் சிந்திப்பீர்
இயேசு கிறிஸ்துவின்
வேலை ஒன்றே - இன்று
பிரதானம்

1. ஒன்று இரண்டென
எத்தனை வருடங்கள்
கனவென கழிந்தது பார்
எஞ்சிய நாட்களை வஞ்சிக்காது
தேவ போரினில் ஈடுபடு — சிந்திப்பீர்

2. நாட்கள் நடுவினில்
வாய்ப்புக்கள் உனக்காக
எத்தனை நாட்கள் உண்டு
சாதகமானதோர் வாசல் இங்கு கண்டு
வந்து பயன் படுத்து — சிந்திப்பீர்

3. ஆழக் கடல்களில்
படகை செலுத்திட
கடல் போன்ற தேவையல்லோ
பாவக் கடலினில் மூழ்கிடும் யாவர்க்கும்
படகு உன் சாட்சியல்லோ — சிந்திப்பீர்

**18** **சரணங்கள்**

1. எந்தன் உள்ளம் புது கவியாலே பொங்க
இயேசுவைப் பாடிடுவேன்
அவர் நாமம் ஊற்றுண்ட பரிமள தைலம்
அவரையே நேசிக்கிறேன்

பல்லவி

அல்லேலூயா துதி அல்லேலூயா - எந்தன்
அண்ணலாம் இயேசுவைப் பாடிடுவேன்
இத்தனை கிருபைகள் நித்தமும் அருளிய
கர்த்தனைக் கொண்டாடுவேன்

2. சென்ற காலம் முழுவதும் காத்தாரே ஓர்
சேதமும் அணுகாமல்
சொந்தமாக ஆசீர் பொழிந்தெனக்கின்றும்
சுக பெலன் அளித்தாரே — அல்லேலூயா

3. சிலவேளை இமைப் பொழுதே தம் முகத்தை
சிருஷ்டிகர் மறைத்தாரே
கடும் கோபம் நீக்கித் திரும்பவும் என் மேல்
கிருபையும் பொழிந்தாரே — அல்லேலூயா

4. பஞ்ச காலம் பெருகிட நேர்ந்தாலும் - தாம்
தஞ்சமே ஆனாரே
அங்கும் இங்கும் நோய்கள் பரவி வந்தாலும்
அடைக்கலம் அளித்தாரே — அல்லேலூயா

5. களிப்போடு விரைந்தெம்மைச் சேர்த்திட என்
கர்த்தரே வருவாரே
ஆவலோடு நாமும் வானத்தை நோக்கி
அனுதினம் காத்திருப்போம் — அல்லேலூயா

---

## 19 சரணங்கள்

1. நான் பாவச் சேற்றினிலே வாழ்ந்தேன்
நான் சாபத்திலே மாண்டேன்
எண்ணிலடங்கா பாவங்கள் போக்கி
ஏசென்னை மீட்டாரே

அனுபல்லவி

என் நாவிலே புதுப்பாட்டுகள்
என்றென்றும் கவி தங்கிடும்
மா சந்தோஷம் மறுபிறப்பீந்து
மன இருள் நீக்கினார்

2. என் ஆத்தும மீட்பை அருமையாய்
இயேசாண்டவர் எண்ணினதால்
சொந்தம் தம் ஜீவனும் இரத்தம் எனக்காய்
சிந்தி இரட்சித்தாரே

3. கார்மேகம் போல் என் பாவங்கள்
கர்த்தர் அகற்றினரே
முழுக்கியே தள்ளும் சமுத்திர ஆழம்
தூக்கி எறிந்தாரே

4. என் ஜென்ம கரும பாவங்கள்
எல்லாம் தொலைத்தாரே
மன்னித்து என்றும் மறந்து விட்டரே
மா பரமானந்தம் என்

5. மேற்கு திசைக்கும் கிழக்குக்கும்
மா எண்ணில்லா தூரம்
எந்தன் பாவங்கள் அத்தனை தூரம்
இயேசு விலக்கினர் என்

—/—

## 20

திருப்பாதம் நம்பி வந்தேன்
கிருபை நிறை இயேசுவே
தமதன்பைக் கண்டடைந்தேன்
தேவ சமுகத்திலே } 2

1. இளைப்பாறுதல் தரும் தேவா
களைத்தோரைத் தேற்றிடுமே
சிலுவை நிழல் எந்தசம்
சுகமாய் அங்கு தங்கிடுவேன் } 2

2. என்னை நோக்கிக் கூப்பிடு என்றீர்
இன்னல் துன்ப நேரத்திலும்
கருத்தாய் விசாரித்து என்றும்
கனிவோடென்னை நோக்கிடுமே } 2

3. மனம் மாற மாந்தன் நீரல்ல
மனவேண்டுதல் கேட்டிடும்
என துள்ளம் ஊற்றி ஜெபித்தே
ஏசுவே உம்மை அண்டிடுவேன் } 2

4. என்னைக் கைவிடாதிரும் நாதா
என்ன நிந்தை நேரிடினும்
உமக்காக யாவும் சகிப்பேன் | 2
உமது பெலன் தந்திடுமே |

5. உம்மை ஊக்கமாய் நோக்கிப் பார்த்தே
உண்மையாய் வெட்கம் அடையேன்
தமது முகப் பிரகாசம் | 2
தினமும் என்னில் வீசிடுதே |

6. சத்துரு தலை கவிழ்ந்தோட
நித்தமும் கிரியை செய்திடும்
என்னைத் தேற்றிடும் அடையாளம் | 2
இயேசுவே இன்று காட்டிடுமே |

7. விசுவாசத்தால் பிழைத்தோங்க
வீரபாதை காட்டினீரே
வளர்ந்து கனி தரும் வாழ்வை | 2
விரும்பி வரம் வேண்டுகிறேன் |

8. பலர் தள்ளின மூலக்கல்லே
பரம சீயோன் மீதிலே
பிரகாசிக்கும் அதை நோக்கி | 2
பதறாமலே காத்திருப்பேன் |

---

**21**

நாளை நடப்பதை அறியா நண்பரே
இவ்வேளையை ஆதாயப் படுத்திக் கொள்வீர்

### சரணங்கள்

1. வாசலண்டை நின்று தட்டும் சத்தம் கேட்டு
நீச உள்ளம் திறந்தவர் அறியகாட்டு
அவர் இரத்தம் கழுவியே மாற்றிடும் தீட்டு
சுத்தம் சுத்தமானேன் என்று பாடுவாய் பாட்டு —நாளை

2. தகுதியா என்று எண்ணி தூர போகாதே
தகாத உணர்வுக்குள் தீர்மானம் பண்ணாதே
ஆவி போராடும் போது அசட்டை பண்ணாதே
தேவ கிருபை உன்னை தாங்க வல்லதே நாளை

3. ஆதரவு இல்லை என்று சோர்ந்து போகாதே
பேதுருவை பார்த்த கண்கள் உன்னை நோக்குதே
காணாதாட்டை தேடி வந்த நல்ல மேய்ப்பர்
கண்டால் உன்னை தூக்கி தம்மின் மந்தையில் சேர்ப்பார்
-நானே

4. ஆவியாலும் ஜலத்தாலும் கழுவப்பட்டு
ஆண்டவருக்குள் மறுபிறப்படைந்து
மரணத்தை ஜெயித்து நீ ஜீவன் அடைவாய்
மன்ன இயேசு மார்பில் சாய்ந்து மகிழ்ந்திடுவாய் -நானே

5. வழியும் சத்தியமும் ஜீவனுமவரே
நுழையுமே பிழைத்திட அவரில் நீரே
அழிந்திடும் யாவும் அதிசீக்கிரமே
மடிந்திடும் முன்னே மன்ன இயேசுவண்டை வா -நானே

---

**22**

## பல்லவி

எந்தன் நாவில் புதுப்பாட்டு | 2
எந்தன் இயேசு தருகிறார் |

## அனுபல்லவி

ஆனந்தம் கொள்ளுவேன் அவரை நான் பாடுவேன்
உயிருள்ள நாள் வரையில் (2) -எந்தன் நவில்

## சரணங்கள்

1. பாவ இருள் என்னை வந்து சூழ்ந்து கொள்கையில்
தேவனவர் தீபமாய் என்னைத் தேற்றினார் -ஆனந்
2. வாதை நோயும் வந்தபோது வேண்டல் கேட்டிட்டார்
பாதை காட்டி துன்பமெல்லாம் நீக்கி மீட்டார் -ஆனந்
3. சேற்றில் வீழ்ந்த என்னையவர் தூக்கியெடுத்தார்
நாற்றமெல்லாம் ஜீவரத்தம் கொண்டு மாற்றினார் -ஆனந்

---

**23**

1. எனக்காய் ஜீவன் விட்டவரே
என்னோடிருக்க எழுந்தவரே
என்னை என்றும் வழி நடத்துவாரே
என்னை சந்திக்க வந்திடுவாரே

**பல்லவி**

இயேசு போதுமே இயேசு போதுமே
எந்த நாளிலுமே எந்நிலையிலுமே
எந்நாள் வாழ்விலுமே இயேசு போதுமே

2. சோர்வின் வேளையில் போதும் ... டாலும்
சோர்ந்து போகாமல் [illegible]
உலகமும் மாமிசமும் [illegible] டாலும்
[illegible] — இயேசு

3. [illegible]
[illegible]
[illegible]
[illegible] — இயேசு

4. மனிதர் எனக்கு கைவிட்டாலும்
மாமிசம் அழுகி நாறிட்டாலும்
ஐசுவரியம் யாவும் அழிந்திட்டாலும்
ஆதாரமாய் என்று தாங்கிட்டாலும் — இயேசு

---

## 24

1. கர்த்தர் உன் வீட்டைக் கட்டாராகில்
அதைக் கட்டும் உந்தன் பாடுகளே
கர்த்தர் நகரத்தைக் காவல் செய்யாவிடில்
உன் காவல் விழிப்பும் வீணே

**பல்லவி**

ஆதலால் உன் உள்ளமே சதா அவர் சமுகம்
நிதம் தேடியே நிலைத்திடுவாய்
கர்த்தருக்கும் பயந்து அவர் வழி நடந்தால்
நீ பாக்கியம் கண்டடைவாய்

2. உன் வழிகளிலெல்லாம்
உன்னை தூதர்கள் காத்திடுவார்
உன் பாதம் கல்லில் இடறாது
தங்கள் கரங்களில் ஏந்திடுவார் — ஆதலால்

3. இரவின் பயங்கரத்துக்கும்
பகலில் பறக்கும் அம்புக்கும்
இருளில் நடமாடும் கொள்ளை நோய்க்கும்
நீ பயப்படவே மாட்டாய் — ஆதலால்

4. சிங்கத்தின் மேலும் நடந்து
வலுசர்ப்பத்தையும் மிதிப்பாய்
அவர் நாமத்தை நீ முற்றும் நம்பினதால்
உன்னை விடுவித்துக் காத்திடுவார் — ஆதலால்

5. ஆபத்திலும் அவரை நான்
நோக்கிக் கூப்பிடும் வேளையிலும்
என்னைத் தப்புவித்தே முற்றும் இரட்சிப்பாரே
என் ஆத்தும நேசரவர் — ஆதலால்

6. கர்த்தருக்குப் பயப்பட்டவன்
இவ்வித ஆசீர்வாதம் பெறுவான்
கர்த்தர் சீயோனில் இருந்து உன்னை
கடைசி மட்டும் ஆசீர்வதிப்பார் — ஆதலால்

---

**25** இயேசுவின் நாமம் இனிதான நாமம்
இணையில்லா நாமம் இன்ப நாமம் } 2

1. பாவத்தைப் போக்கும் பயமதை நீக்கும்
பரம சந்தோஷம் பக்தருக்களிக்கும் — இயேசு

2. பரிமள தைலமாம் இயேசுவின் நாமம்
பார் எங்கும் வாசனை வீசிடும் நாமம்

3. வானிலும் பூவிலும் மேலான நாமம்
வானோதி வானவர் இயேசுவின் நாமம் — இயேசு

4. நேற்றும் இன்றும் என்றும் மாறிடா நாமம்
நம்பினோரை என்றும் கைவிடா நாமம் — இயேசு

5. முழங்கால் யாவும் முடங்கிடும் நாமம்
மூன்றில் ஒன்றாக ஜொலிப்பவர் நாமம் — இயேசு

6. சாத்தானின் சேனையை ஜெயித்திட்ட நாமம்
சாபப்பிசாசை துரத்திடும் நாமம் — இயேசு

---

26

யாரிடம் செல்வோம் இறைவா
வாழ்வுதரும் வார்த்தையெல்லாம்
உம்மிடம் அன்றோ உள்ளன
யாரிடம் செல்வோம் இறைவா
இறைவா......இறைவா......யாரிடம் செல்வோம்
இறைவா......இறைவா

1. அலைமோதும் உலகினிலே
ஆறுதல் நீ தரவேண்டும்
அண்டிவந்தோம் அடைக்கலம் நீ
ஆதரித்தே அரவணைப்பாய்

2. மனதினிலே போராட்டம்
மனிதனையே வாட்டுதையா
குணமதிலே மாறாட்டம்
குழப்பம்தான் இனிவதெய்யோ

3. வேரறுந்த மரங்களிலே
விளைந்திருக்கும் மலர்களைப்போல
உலகிருக்கும் நிலை கண்டும்
உமது மனம் இரங்காதோ

4. அமைதி ஒன்றைத் தேடிவந்தேன்
நீ என்றே உனை தொடர்ந்தேன்
பாருலகில் ஆறுதல் யார்
நீ அன்றேல் என் துணையார்.

---

27

## பல்லவி

ஆதாரம் நீதான் ஐயா என் துரையே
ஆதாரம் நீதான் ஐயா

## அனுபல்லவி

சூதாம் உலகில் நான் தீதால் மயங்கையில் — ஆதாரம்

1. மாதா பிதாவெனத் நீதாம் மதிக்கையில்
மற்றோர்க்கும் மற்றோனையா எளியன்மேல்
மற்றோர்க்கும் மற்றோனையா எளியனுக்கு — ஆதாரம்

2. நாம், நாம் துணையென நயந்துரை சொன்னவர்
நட்டாற்றில் விட்டாரையா; தனியனை
நட்டாற்றில் விட்டாரையா; தனியனுக்கு — ஆதாரம்

3. கற்றோர் பெருமையே; மற்றோர் அருமையே
வற்றாக் கிருபை நதியே, என் பதியே
வற்றாக் கிருபை நதியே என் பதியே — ஆதாரம்

4. சோதனையடர்ந்து வேதனை தொடர்ந்து
துக்கம் மிகுவேளையில் என் சுகிர்தமே,
துக்கம் மிகுவேளையில், உன் தாசனுக்கு — ஆதாரம்

28

## பல்லவி

நெஞ்சே நீ கலங்காதே—சீயோன் மலையின்
ரட்சகனை மறவாதே—நான் என் செய்வேனென்று

## அனுபல்லவி

வஞ்சர் பகைசெய்தாலும் வாராவினை பெய்தாலும்
— நெஞ்சே

## சரணங்கள்

1. வினைமேல் வினைவந்தாலும்—பெண்சாதி பிள்ளை
மித்ரு சத்ருவானாலும்,
மனையொரு கொள்ளை போனாலும், வானம் இடிந்து
வீழ்ந்தாலும் — நெஞ்ச

2. பட்டயம், பஞ்சம் வந்தாலும்—அதிகமான
பாடு நோவு மிகுந்தாலும்
மட்டிலா வறுமைப்பட்டாலும், மனுஷர் எல்லாம்
கைவிட்டாலும் — நெஞ்சே

3. சின்னத்தனம் எண்ணினும்—நீ நன்மை செய்யாத
தீமைபிறர் பண்ணினாலும்,
பின்ன பேதகம் சொன்னாலும், பிசாசுவந்தணைப்பினாலும்

4. கள்ளன் என்று பிடித்தாலும்—விலங்கு போட்டுக்
காவலில் வைத்தடித்தாலும்,
வெள்ளம் புரண்டு தலைமீதில் அலைமோதினாலும் — நெஞ்சே

**29**

உன்னத தேவன் உன்னை அழைக்கிறார்
தம்பியே வந்திடுவாய்

## அநுபல்லவி

சிலுவை சுமந்தே உனக்காய் அவர் மரித்தாரே

## சரணங்கள்

1. பாவத்தில் அழியாதே
தேவனை மறவாதே
இருதயத்தைத் தட்டுகிறார்
இன்றதைத் திறந்தளிப்பாய் — உன்

2. இன்று உன் ஜீவன் போனாலும்
எங்கு நீ சென்றிடுவாய்
இந்த வேளை சிந்தனை செய்
இயேசுன்னை அழைக்கிறாரே — உன்

3. நரகத்தின் பாதையிலும்
மரணத்தின் வழிகளிலும்
உல்லாசமாய் நடப்பது ஏன்
உண்மையாய் அழிந்திடுவாய் — உன்

4. தம்மிடம் வருபவரைத்
தள்ளிடவே மாட்டார்
அன்புக்கரம் விரித்தவராய்
ஆண்டவர் அழைக்கிறாரே — உன்

**30**

## பல்லவி

வாலிப நாளில் உன் தேவனைத் தேடி ஓடிவா
பாவி உன்னை அழைக்கிறார் இயேசு ராஜனே

## சரணங்கள்

1. பாவம் உன்னைத் தொடருமே சாபம் கொல்லுமே
உன் இன்ப லாபம் எல்லாமே சாபம் காலம் இதுவே

2. எத்தனையோ விபத்தினின்று உன்னை விலக்கினார்
நித்தமும் உன்னை பத்திரமாக நடத்தி வருகிறார்

3. அந்தரங்க பாவத்தினால் வேதனையுற்றேன்
உந்தன் தூய இரத்தத்தினாலே ஆனந்தம் பெற்றேன்

4. உன் அகோர பாவம் எல்லாம் சுமந்து தீர்த்தாரே
வன் கொலையின் வாதைகள் எல்லாம் மகிழ்ந்து சகித்தாரே

——

51

1. இயேசு மீட்பர் உந்தன் நெஞ்சில்
வாசம் பண்ணவிடாயோ
உந்தன் பாவம் சுமந்தோரை
இன்று ஏற்றுக் கொள்வாயோ?

பல்லவி

இயேசு மகா இராஜன் இதோ
வாசலண்டை நிற்கிறார்
பாவி நீ இவ்வன்பை எண்ணி
வாசலைத் திறக்கப் பார்

2. பாவம், லோகம். ஆசாபாசம்
யாவும் இடம் பெற்றதோ?
நீசச் சிலுவையில் மாண்ட
நேசர்க் கிடமில்லையோ? — இயேசு

3. இன்னுமே நீ தாமதித்தால்
பின்பு மோசம் வருமே
இப்போதே இரட்சண்ணியகாலம்
அப்பால் பிந்திப் போகுமே — இயேசு

4. கூவி நிற்கும் மீட்பர் சத்தம்
பாவி கேட்டுத் திறப்பாய்
உந்தன் ஜீவன் பெலன் யாவும்
இன்றே தத்தம் செய்குவாய்

——

2 அன்பரே கூடுங்கள் ஆனந்தம் பாடுங்கள்
எம்பரன் இயேசுவை என்றென்றும் நாடுங்கள்

1. நல்ல நாள் இதிலே நாதனைப் பணியுங்கள்
செல்வ பாக்கியந்தரும் சீமானை தேடுங்கள் — அன்பரே

2. சுவிசேஷப் பண்டிகை சோபனதினமதில்
கவிபாடி போற்றியே கர்த்தனை கொண்டாடுங்கள் — அன்

3. வல்ல தேவன் நம்மோடு வந்திட மன்றாடுங்கள்
தொல்லையணுகாமலே சுத்தனாரும் செய்குவார் — அன்

4. கர்த்தரின் கட்டளை கைக்கொண்டு திட்டமாய்
உத்தமரின் திவ்விய ரட்சிப்பைக் கூறுவோம் — அன்

5. பக்தியாய் ஜெபித்து பாடியே பூரிப்போம்
நித்தனுர் நம்மையே நீடூழி வாழ்விப்பார் — அன்

6. ஆத்தும ஆதாயம் அன்புடனே செய்குவோம்
பாத்திர ராக்கியே பரனுசீர் புரிவார் — அன்

---

33 உலகம் உன் சதமென்று எண்ணியிராதே
பலவித பாதாள வலையிற் சிக்காதே — உலகம்

1. மாதா பிதா மற்றுஞ் செல்வமிருந்தாலும்
மரணம் வந்தேயுந் தன் வாழ்வைக் குலைக்கும்

2. சாவின் கோரக் காட்சி நெருங்கையில்
பாவி நான் என் செய்வேனென்று திகைப்பாய்

3. நித்திய வாதைக்குயிரையாக்கி விடுமுன்
சத்தியர் பாதத்தைப் பாவி நீதே — உலகம்

4. நரகத்தின் புழுக்களும் நெருப்பு மட்டுமல்ல
பரலோ கீதங்களுன்னை வதைக்கும்

5. பாவ விமோசன மிப்போதே பெறுவாய்
தாவியுன் மீட்பரின் பாதத்தைநத்தே — உலகம்

---

34

ஜெயம் ஜெயம் அல்லேலுயா ஜெயம் ஜெயம் எப்போதும்
இயேசுநாதர் நாமத்திற்கு ஜெயம் ஜெயம் எப்போதும்

1. உம்மைப் பின் செல்வேன் என் சுவாமி எனக்காக நீர்
மரித்தீர்
எல்லோரும் ஓடினாலும் உமதன்பால் நானிற்பேன்
பாவி பாவி பாவி பாவி பரலோகம் சேரலாம்
பிராண நாதர் பாதத்தண்டை தாவியே ஓடிவா — ஜெயம்

2. பாவ சஞ்சலத்தை விட நாளை வரக்காத்திராதே
இரட்சகரே அழைக்கிறார் பாவியே ஓடிவா
நானே வழி நானே சத்தியம் நானே ஜீவன் என்றாரே
நாதன் கிறிஸ்து வண்டை பாவியே ஓடிவா

---

35

அழைக்கிறார் அழைக்கிறார் இதோ
நீயும் வர உந்தன் நேசர்
ஆவலாய் அழைக்கிறார் — இதோ

1. பாவத்தை ஏற்றவர் பலியாய் மாண்டவர்
கல்வாரியின் மேட்டினில் கண் கொள்ளாத காட்சியே
கண்டிடும் வேண்டிடும் பாவப்பாரம் நீங்கிடும்

2. நோயையும் ஏற்றவர் பேயையும் வென்றவர்
நேசா உந்தன் நோய்களை நிச்சயமாக தீர்த்தாரே
நோயுற்ற உன்னையே நேசமாய் அழைக்கிறார்

3. துன்பம் சகித்தவர் துயரடைந்தவர்
இன்னலுற்ற உன்னையே அண்ணல் யேசழைக்கிறார்
துன்புரும் நெஞ்சமே துரிதமாக வாராயோ

4. அந்த கேடடைந்தார் அழகற்று தோன்றினார்
சொந்தமாக சேர்ந்திட இந்த பாடடைந்தாரே
நிந்திக்கும் உன்னையும் சந்திப்பார் நீ வாராயோ.

---

36

பல்லவி

தாசரே இத் தாரணியை அன்பாய்
இயேசுவுக்குச் சொந்தமாக்குவோம்

அனுபல்லவி

நேசமாய் இயேசுவைக் கூறுவோம் அவரைக்
காண்பிப்போம் மாவிருள் நீக்குவோம்
வெளிச்சம் வீசுவோம்

1. வருத்தப்பட்டுப் பாரஞ்சுமந்தோரை
வருந்தியன்பாய் அழைத்திடுவோம்
உரித்தாய் இயேசு பாவபாரத்தை நமது துக்கத்தை
நமது துன்பத்தை சுமந்து தீர்த்தாரே — தாசரே

2. பசியுற்றோருக்கும் பிணியாளிகட்கும்
பட்சமாக உதவி செய்வோம்
உசித நன்மைகள் நிறைந்து தமை மறந்து
இயேசு கனிந்து திரிந்தனரே — தாசரே

3. நெருக்கப்பட்டு ஒடுக்கப்பட்டோரை
நீசரை நாம் உயர்த்திடுவோம்
பொறுக்கவொண்ணா கஷ்டத்துக்குள் நிஷ்டூரத்துக்குள்
படுகுழிக்குள் விழுந்தனரே — தாசரே

4. இந்துதேசமாது சிரோமணிகள்
வித்தையொளிக்குள் வர வழைப்போம்
சுந்தரகுணங்களடைந்து அறிவிலுயர்ந்து
நிர்பந்தங்கள் தீர்த்து சிறந்திலங்கிட

5. மார்க்கம் தப்பி நடப்போரை சத்ய
வழிக்குள் வந்திடச் சேர்த்திடுவோம்
ஊக்கமாக ஜெபித்திடுவோம் நாம் முயன்றிடுவோம்
நாம் உழைத்திடுவோம் நாம் ஜெயித்திடுவோம் — தாசரே

---

37

## பல்லவி

காலத்தின் அருமையை அறிந்து வாழாவிடில்
கண்ணீர் விடுவாயே
ஞாலத்தில் பரனுனை நாட்டின நோக்கத்தைச்
சீலமாய் நினைத்தவர் மூலமாய் பிழைத்திடுவாய் — கால

## சரணங்கள்

1. மதியை யிழந்து தீய வழியில் நீ நடந்தால்
வருங்கோபம் அறிந்திடாயோ
கதியாம் ரக்ஷண்ய வாழ்வைக்கண்டு நீ மகிழ்ந்திட
காலம் இதுவே நல்ல காலம் என்றறியாயோ? — கால

2. இகத்தினில் ஊழியம் அகத்தியம் நிறைவேற
ஏசுனை அழைத்தாரல்லோ
மகத்துவ வேலையை மறந்து தூங்குவாயானால்
பகற்கால முடியும் ராக்காலத்திலென்ன செய்வாய் — கால

3. நோவாவின் காலத்தில் நூற்றிருபது ஆண்டு
நோக்கிப்பின் அழித்தாரன்றோ?
தாவாத கிருபையால் தாங்கி உனக்களித்த
தவணையின் காலமிவ்வருட முடியலாமே — கால

4. முந்தி எரேமியா அனனியாவுக்குரைத்த
முடிவை நீ யறியாயோ!
எந்தக் காலமும் சிரஞ்சீவியென்றெண்ணிடாமல்
ஏற்ற ஆயத்தமாய் எப்போதும் இருந்திடாயோ! — கால

---

58

1. உலகோர் உன்னை பகைத்தாலும்
உண்மையாய் அன்பு கூறுவாயா } 2
உற்றார் உன்னை வெறுத்தாலும்
உந்தன் சிலுவை சுமப்பாயா } 2

உனக்காக நான் மரித்தேனே
எனக்காக நீ என்ன செய்தாய் } 2

2. உலக மேன்மை அற்பம் என்றும்
உலக ஆஸ்தி குப்பை என்றும்
உள்ளத்தினின்று கூறுவாயா
ஊழியம் செய்ய வருவாயா

3. மேய்ப்பன் இல்லாத ஆடுகள் போல்
மேய்கிறார் பாவப் புல்வெளியில்
மேய்ப்பன் இயேசுவை அறிந்த நீயும்
மேன்மையை நாடி ஓடுகின்றாயோ

4. இயேசு என்றால் என்ன விலை
என்றே கேட்டிடும் எத்தனை பேர்
பிள்ளைகள் அப்பம் கேட்கின்றனர்
ஜீவ அப்பம் கொடுப்பாயா

5. ஐந்து சகோதரர் அழிகின்றாரே
யாரையாவது அனுப்பிடுமே
யாரை நான் அனுப்பிடுவேன்
யார்தான் போவார் எனக்காக

---

39

1. இராஜாதி இராஜன் இயேசு வருவார்
சந்திக்க ஆயத்தமா
வருவேன் என்றவர் சீக்கிரம் வருவார்
சந்திக்க ஆயத்தமா?

கேள்! கேள்! மானிடரே!
சந்திக்க ஆயத்தமா?
இராஜாதி இராஜனை வந்திடுவார்
சந்திக்க ஆயத்தமா?

2. பல்லாயிரம் மக்கள் ஆயத்தமே
சந்திக்க ஆயத்தமா?
பரலோக வாழ்வின் நல்பாக்கியத்தை
சந்திக்க ஆயத்தமா?

3. குத்தினோர் யாவரும் கண்டிடுவார்
சந்திக்க ஆயத்தமா?
கதறிக் கதறியே தாழிடுவார்
சந்திக்க ஆயத்தமா?

4. உலக மனைத்துமே கண்டிடுமே
சந்திக்க ஆயத்தமா?
பரிசுத்தவான்களின் போர் நிற்குமே
சந்திக்க ஆயத்தமா?

---

40

அழைப்பின் குரல் கேட்டேன்
என் ஆண்டவன் என உணர்ந்தேன்

அனுபல்லவி

அருகினில் தயங்கி நடைபயின்றே - நீ
வாயென முன் சென்றார் (2)

1. அறிவில் குறைந்தவன் நானன்றோ - அதைத்
தெரிந்தும் அழைத்தது ஏனென்றேன்
அறிந்தவர் செருக்கினை அடக்கிடவே (2)
பின் வா யென முன்சென்றார் (2)

2. வலிமை குறைந்தவன் நானன்றோ - அதைத்
தெரிந்தும் அழைத்தது ஏனென்றேன்
வலியவர் கொடுக்கினை வதைத்திடவே (2)
பின் வாயென முன் சென்றார் (2)

3. குறைகள் மிகுந்தவன் நானன்றோ - இதைத்
தெரிந்தும் அழைத்தது ஏனென்றேன்
கருவிலிருந்து உனைத் தெரிந்தவன் நான் (2)
பின் வாயென முன் சென்றார் (2)

**41**

1. எல்லாவரமும் நிரம்பித்ததும்
திவ்ய தூய ஆவியே
அடியோர் உள்ளத்தில் எழுந்தே வருவீர்
இனிய ஸ்நேக தேவனே

2. உலக இருளை அகற்ற உமது
பரலோக ஒளி தாருமே
உண்மை கண்டு நன்மை பெற
நாதனே அருள் புரிவாய்

3. நன்மை பயக்கும் ஞானக் கொடைகள்
யாவும் அளிப்பாய் பரமனே
நல் வழியை நாங்கள் கண்டு
நற்கதி பெறச் செய்குவாய்

4. ஞானம் புத்தி விமரிசையுடன்
அறிவு திடம் பக்தியும்
தெய்வ பயமான வரங்கள்
அனைத்தும் எமக்கு ஈவாயே

---

**42**

1. பலிபீடத்திலென்னைப் பரனே
படைக்கிறேனே இந்த வேளை
அடியேனைத் திருச்சித்தம் போல
ஆண்டு நடத்திடுவீர்.

### பல்லவி

கல்வாரியின் அன்பினையே
கண்டு விரைந்தோடி வந்தேன்
கழுவும் உம் திரு ரத்தத்தாலே
கறை நீங்க இருதயத்தை.

2. நீரன்றி என்னாலே பாரில்
ஏதும் நான் செய்திட இயலேன்
சேர்ப்பீரே வழுவாது என்னை
காத்துமக்காய் நிறுத்தி.

3. ஆவியோடாத்ம சரீரம்
அன்பரே உமக் கென்றும் தந்தேன்
ஆலயமாக்கியே இப்போ
தாசீர் வதித்தருளும்.

4. சுயமென்னில் சாம்பலாய் மாற
சுத்தாவியே அனல் மூட்டும்
ஜெயம் பெற்று மாமிசம் மாய
தேவா அருள் செய்குவீர்

5. பொன்னையும் பொருளையும் விரும்பேன்
மண்ணின் வாழ்வையும் வெறுத்தேன்
மன்னவன் இயேசுவின் சாயல்
இந்நிலத்தே கண்டதால்.

O—O

**15**

என்னை ஆளும் இயேசு நாதா
எந்தன் ஆவி ஆத்மா சரீரம்
ஜீவபலியாய் ஒப்படைத்தேன்
ஜெயம் தந்தாட் கொள்ளும்.

### சரணங்கள்

1. அதிகாலை தோறும் எனை எழுப்பி
அறிவை ஊட்டி நிரப்புவீர்
இளைத்தவருக்கு ஏற்ற சமயம் } (2)
இனிய வாக்கைத் தந்தருளும் — } என்னை

2. இருளின் அந்தகாரத்தினின்றென்னை
அருள் ஒளியினுள் அழைத்தீரே
அன்புக் குமாரனின் இராஜ்ஜியமதில் | 2
இன்பமுடனே பங்களித்தீர் | என்னை

3. எனது சுதந்திரம் பங்கு மாவீர்
எனது உள்ளம் பூரிக்குதே
ஆறுதல் தேறுதல் அல்லும் பகலும் | 2
ஆசீர்வாதங்களுமளித்தீர் | என்னை

4. எரியும் விளக்கில் எண்ணெயும் ஊற்ற
எரிந்து நானும் பிரகாசிப்பேன்
மலைபோல் பட்டணம் மறைந்திடுமோ | 2
மங்கிடாதென்றும் உம்மகிமை | என்னை

5. நீரோடைகளை வாஞ்சிக்கும் மான்போல்
நித்தம் என் ஆத்மா கதறுதே
வறண்டு விடாய்த்த என் இருதயத்தில் | 2
வற்றாத ஊற்றாய்ப் பாய்ந்திடுவீர் | என்னை

6. சமாதானத்தின் தேவனே வருவீர்
சத்திய வாக்கு
விரைந்து பறந்து கர்த்தரைக் காண | 2
விசுவாசத்தோடு தைரியம் கொள்வேன் | என்னை

**44**

தேடுங்கள் கண்டடைவீர்
தேவ தேவனின் தூய திருமுகம் காண
தேடிடுவோம் அதிகாலமே — (2)

## சரணங்கள்

1. சென்ற வாழ் நாளெல்லாம் காத்தார் எந்த
சேதமும் வந்தணுகாமல்
இந்த புது தினம் கண்டடைய
தந்தனரே தமது கிருபை — தேடு

2. நல்ல சுகபெலன் தந்து தம்
வல்ல நல் ஆவியும் ஈந்து
வெல்ல பிசாசை ஜெயமெடுத்து
சொல்லதம் அன்பெனிலே பொழிந்தார் — தேடு

3. ஊண் உடைதந்தாதரித்து — இந்த
ஊழிய பாதையில் காத்து
கூப்பிடும் வேளை செவிகொடுத்து
கேட்டிடும் யாவையும் ஈந்தனரே — தேடு

4. ஜீவனும் உள்ள நாளெல்லாம் — என்
தேவனை கீர்த்தனம் பண்ணி
ஓசையுள்ள கைத்தாளத் தோடே
நேசய்யா ஏகுவை தோத்தரிம் போம் — தேடு

5. காலையில் தோத்திர கீதம் — இந்த
வேளையில் வேதத்தின் தியானம்
நல் ஜெப தூபம் எனது இன்பம்
நற்கிரியைகள் செய்துழைப்பேன் — தேடு

6. கர்த்தரை நான் எப்பொழுதும் — என்
கண் முன்னில் நிறுத்தி நோக்க
நாள் முழுதும் அவர் பின் நடக்க
நேர்வழி பாதையும் காட்டிடுவார் — தேடு

---

## 45

அதிசயமான ஒளிமய நாடாம்
நேசரின் நாடாம் நான் வாஞ்சிக்கும் நாடாம்

1. பாவம் இல்லாத நாடு
ஒரு சாபமும் காணா நாடு (2)
நித்திய மகிழ்ச்சி ஓயாத கீதம்
உன்னத்தில் ஒசன்னா — அல்லேலூயா

2. சந்திர சூரியன் இல்லை
ஆனால் இருள் ஏதும் காணவில்லை (2)
தேவ குமாரன் ஜோதியில் ஜோதி
நித்திய வெளிச்சமாவார் — என்றும் பகல்.

3. வித விதக் கொள்கையில்லை
பல பிரிவுள்ள பலகை இல்லை (2)
ஒரே ஒரு குடும்பம் ஒரே ஒரு தலைவர்
எங்குமே அன்புமயம் — அன்புள்ளோர் செல்லும்.

4. பிரச்சனை எதும் இல்லை
வீண் குழப்பங்கள் ஒன்றும் இல்லை (2)
மொழி நிறம் ஜாதி பற்று உடையோர்
எவருமே அங்கு இல்லை — அன்பே மொழி

5. பல பல திட்டம் இல்லை
ஆளும் சட்டங்கள் ஏதும் இல்லை (2)
காவல்துறையில்லை கண்டிப்பும் இல்லை
மனிதனின் ஆட்சியில்லை — பேரானந்தமே.

6. கடைத் தெரு எதும் இல்லை
தொழிற்சாலைகள் ஒன்றும் இல்லை (2)
தரித்திரர் செல்வர் சிறியவர் பெரியோர்
ஆகிய சிறப்பும் இல்லை — எல்லாம் சமம்

7. இயேசுவின் இரத்தத்தினால்
பாவம் கழுவினால் செல்லலாமே (2)
இத்தனை பெரிய சிலாக்கியம் இழப்போர்
இப் பூமியில் எவரும் வேண்டாம் — இன்றே வாரீர்

---

## 46

அல்லேலூயா ஜெயம் அல்லேலூயா (4)
ஆனந்தக் கூட்டமாய் ஒன்றாகக் கூடி
ஆண்டவர் இயேசுவை வாழ்த்திடுவோம்

1. விசுவாசக் கூட்டத்தார் ஒன்றாகச் சேர்வோம்
தர்க்கங்கள் யாவையும் தள்ளிடுவோமே
இயேசுவின் அன்பையே உயர்த்திடுவோமே
என்றென்றும் அன்பிலே ஒன்றாய் நின்றே! —ஆனந்த

2. உறுப்புகள் பலவாகும் என்றிருந்தாலும்
உடல் ஒன்றே ஒன்று தான் ஆகுமன்றோ
போர் செய்ய ஒன்றாய் சேர்ந்திடுவோமே
எதிரி சாத்தானை வீழ்த்திடவே! — ஆனந்த

3. ஜெயவீரர் இயேசு நம் முன் செல்கிறாரே
ஜெபசிந்தை கொண்டோராய் பின் செல்லுவோமே
வேதமாம் பட்டயம் ஏகிடுவோமே
வேரோடு சாத்தானை வீழ்த்திடுவோமே — ஆனந்த

4 உப்பாய் ஒளியாய் உலகுக்கு ஆவோம்
உறக்கம் விடுத்து நாம் எழுந்திடுவோமே
இயேசுவின் பாதம் எண்ணற்ருேர் சேர
இணைக்கும் பணியில் முன்னே நிற்போம்.

---

47

யேசு நாமம் பாடப் பாட
இனிமை பொங்குதே — அவர்
இல்லம் வாழ எந்தன் இதயம்
ஏங்கித் தவிக்குதே...

1. ஒங்கும் குரலைக் காக்க வேண்டும்
உன் நாமம் பாடவே (2)
என்னுள்ளம் தேறவே என் தாகம் தீரவே
உன் அன்பில் வாழவே
என் தேவா தேவா வா...

2. தூங்கும் விழிகள் தேற்ற வேண்டும்
வான்தீபம் காணவே (2)
உன் அன்பில் வாழவே உன்னேடு சேரவே
என்னில் நீ வாழவே
என்தேவா தேவா வா.

---

48

1. நேற்றும் இன்றும் என்றும் மாருதவர்
நேசிப்பார் பாவியை யாராயினும்
நோக்கிப்பாரேன் கொல்கதாவை
நேசரின் தியாகச் சிலுவையைப் பார்

பார் பார் பார் மனமே
பாரச் சிலுவையில் யார்
பாவியாம் என்னையும் மீட்டாரே
பாசமுடன் அழைக்கிருர் — (2)

2. விண்ணின் மகிமையைப் படைத்தோரை
விண் வெளி வீரரும் தேடினரே
விரைந்தோடியும் கண்டிலையோ
விண்ணவர் துதிக்கும் இயேசுவைப்பார் — பார்

3. தேடுங்கள் காண்பீர் என்றுரைத்தோரை
தேடினர் ஞானியர் தேசமெங்கும்
தேவ மைந்தன் தொங்குகிறார்
தேவாட்டுக் குட்டி பலியானாரே — பார்

4. சிந்தினார் இரத்தம் பாவி உனக்காய்
சிந்தித்து பாவி என்றுணர்வாயா
சிறந்த வெற்றி உனக்கெதிரே
சித்தம் வைத்தே உன்னை சேர்த்திடுவார் — பார்

---

**49**

தேவ பிதா எந்தன் மேய்ப்பன் அல்லோ
சிறுமை தாழ்ச்சி அடைகிலனே

## அனுபல்லவி

ஆவலதாய் என்னை பைம்புன்மேல்
அவர் மேய்த்தமர் நீர் அருளுகின்றார். — தேவ

## சரணங்கள்

1. ஆத்துமந் தன்னைக் குளிரப் பண்ணி
அடியேன் கால்களை நீதி என்னும்
நேர்த்தியாம் பாதையில் அவர் நிமித்தம்
நிதமும் சுகமாய் நடத்துகின்றார் — தேவ

2. சா நிழல் பள்ளத் திறங்கிடினும்
சற்றும் தீங்கு கண்டஞ்சேனே
வானபரன் என்னோடிப்பார்
வளை தடியும் கோலுமே தேற்றும் — தேவ

3. பகைவர்க் கெதிரே ஒரு பந்தி
பாங்காய் எனக்கென்றேற்படுத்திச்
சுகதயிலம் கொண்டென் தலையைச்
சுபமாய் அபிஷேகம் செய்குவார் — தேவ

4. ஆயுள் முழுவதும் என் பாத்ரம்
அருளும் நலமுமாய் நிரப்பும்
நேயன் வீட்டினில் சிறப்போடே
நெடுநாள் குடியாய் நிலைத்திருப்பேன் — தேவ

## 50

இயேசுவின் நாமத்தில் ஆனந்திப்பேன் (3)
பூவில் மேலான நல் நாமமதே! ஆனந்திப்பேன் (3)

1. வல்லமை நிறைந்த நாமமிதே
தொல் இருள் நீக்கும் நாமமிதே
பாவத்தில் மாண்டிடும் பாவியை தேடிடும்
பாசம் நிறைந்த நல் நாமமிதே! நாமமிதே! நாமமிதே!

2. கருணை காட்டும் நாமமிதே!
கண்ணீர் துடைக்கும் நாமமிதே
வறுமை வியாதிகள் மரண மோசங்கள்
யாவையும் மாற்றிடும் நாமமிதே! நாமமிதே!

3. ஊற்றுண்ட பரிமள தைலமிதே
கீலேயாத்தின் பிசின் தைலமிதே
ஆறுதல் தந்திடும் தேற்றி அணைத்திடும்
அன்பன் இயேசுவின் நல் நாமமிதே!

---

## 51

உந்தன் சிநேக வாக்குகள்
என்றும் மாறிடாததால்
என்னை என்றும் வழி நடத்தும்
உந்தன் ஜீவ பாதையில் (3)

1. கோரமாம் பாவியாம் என்னையும் உந்தன்
கொல்கதா வரைக்கும் கொண்டு சென்று
கழுவி நீர் எந்தன் பாவக்கறைகள்
களைந்து உள்ளத்தின் ஆழத்திலே! — உந்தன்

2. சிநேகத்தின் சிகரமாம் என்னேசு நாதன்
சிந்தியல்லோ கோர குருசதிலே
சிந்தியக் கண்ணீரைக் கண்டதிலை
எந்தன் கண்ணீரைத் துடைக்கவே நீர் மரித்தீர் — உந்தன்

3. திருக்கரம் நீட்டி என்னை அழைத்தீர்
ஆ! மகா சிநேகத்தை வெளிப்படுத்த
ஆயிரம் நாவுகள் இணையாகவில்லை
எங்ஙனம் மறப்பேன் நான் அவரை — உந்தன்

---

**52**

1. ஏதேனில் ஆதி மணம்
உண்டான நாளிலே
பிறந்த ஆசீர்வாதம்
மாருதிருக்குமே

2. இப்போதும் பக்தியுள்ளோர்
விவாகம் தூய்மையாம்
மூவர் பிரசன்னமாவார்
மும்முறை வாழ்த்துண்டாம்

3- ஆதாமுக்கு ஏவாளை
கொடுத்த பிதாவே
இம்மாப்பிள்ளைக்குப் பெண்ணை
கொடுக்க வாருமே

4. இரு தன்மையும் சேர்ந்த
கன்னியின் மைந்தனே
இவர்கள் இரு கையும்
இணைக்க வாருமே

5. மெய் மணவாளனை
தெய்வ குமாரர்க்கே
சபையாம் மனையாளை
ஜோடிக்கும் ஆவியே

6. நீரும் இந்நேரம் வந்து
இவ்விரு பேரையும்
இணைத்து அன்பாய் வாழ்த்தி
மெய் பாக்கியம் ஈந்திடும்

7. கிறிஸ்துவின் பாரியோசே
எழும்பும் வரைக்கும்
எத்தீங்கில் நின்றும் காத்தும்
பேர் வாழ்வு ஈந்திடும்.

**53**

ஆசீர்வதியும் கர்த்தரே ஆனந்தமாகவே
நேசா உமதிரும் கரத்தின் நித்தம் காக்கவே

வீசியோ வான நேசத் தென்றலிலே
பேசியே எம் மனமகிழவே
ஆசாரியரும் வான ராஜனும்
ஆசீர்வதித்திடும்

1. இம் மணமக்களோடென்றும் எங்கேயென்றும் தங்கியே
உம்மையே கண்டும் மேல் வெளியும் நல்ல வெளிச்சத்துடனும்
இம்மையில் போடையாக்கும் வல்லவரே
இன்பத்தோடு வையக நூல்வே
உம்மிலே தங்கித் தரிக்க வல்லமையருளுவேன் —வீசி

2. சற்றுமையாக்கும் இவரை உடைய நீர் நின்றே
பற்றோடும் மீது சாய்ந்துமே பாரில் வாசிக்கவே
வெற்றி பெற்றோங்கும் அவர் தெய்வத்திலே
வீற்றாரும் நீர் ஏக ராஜனும்
உற்றவரான ராயர் செய்கையில் ஒப்பாய் ஒருவனே —வீசி

3. பூதல ஆசீர்வாதத்தால் பூரணமாகவே
ஆதர்த்தாலும் கர்த்தரே ஆசீர்வதித்திடும்
மாத்திரமாக இவர் சந்ததியார்
வந்துதித்திடும் மை பிரகாசமிக்க
ஆ தேவ கிருபை நீர்வளம் ஆம் மேல் அருளுமேன் —வீசி

---

**54**

## பல்லவி

மங்களம் செழிக்க கிருபை அருளும் — மங்கள நாதனே

## சரணங்கள்

1. மங்களம் நித்திய மங்களம் நீ மங்களம் முத்திய நாதனும் நீ
எங்கள் புகலை நீ எங்கள் துணை நீ
உத்தம சத்திய நித்திய தத்துவ மெய்த்த மெய்த்துவ
அத்தனுக்கத்தனும் அபிரகாம் தேவ நீ

2. மணமகன்.......................அவர்களுக்கும்
மணமகள்..................
மானுவேலர்க்கும் மகானுபாவர்க்கும்
பக்தியுடன் புத்தி முத்தியளித்திடும் நித்தியனே உனை
துத்தியம் செய்திடும் சத்திய வேதர்க்கும்

---

## 255

1. பிளவுண்ட மலையே
புகலிடம் தாருமே
பக்கம் பட்ட காயமும்
பாய்ந்த செந்நீர் வெள்ளமும்
பாவதோஷம் யாவையும்
நீக்கும் படி அருளும்

2. எந்த கிரியை செய்துமே
உந்தன் நீதி கிட்டாதே
கண்ணீர் நித்தம் சொரிந்தும்
கஷ்ட தவம் புரிந்தும்
பாவம் நீங்க மாட்டாதே
நீரே மீட்பர் இயேசுவே

3. யாதுமற்ற ஏழை நான்
தாதியற்ற நீசன்தான்
உம் சிலுவை தஞ்சமே
உந்தன் நீதி ஆடையே
தூய ஊற்றை அண்டினேன்
தூய்மையாக்கேல் மாளுவேன்

4. நிழல் போன்ற வாழ்விலே
கண்ணை மூடும் சாவிலே
கண்ணுக்கெட்டா லோகத்தில்
நடுத்தீர்வைத் தினத்தில்
பிளவுண்ட மலையே
புகலிடம் ஈயுமே

---

## 36

1. இந்த அருள் காலத்தில்
கர்த்தரே உம் பாதத்தில்
பணிவோம் முழந்தாளில்

2. தீர்ப்பு நாள் வருமுன்னே
எங்கள் பாவம் உணர்ந்தே
கண்ணீர் சிந்த எவுமே

3. மோட்ச வாசல் இயேசுவே
பூட்டு முன் எம் பேரில்
தூய ஆவி ஊற்றுமே

4. உந்தன் ரத்த வேர்வையால்
செய்த மா மன்றாட்டினால்
சாகச் சம்மதித்ததால்

5. சீயோன் நகர்க்காய்க் கண்ணீர்
விட்டதாலும் தேவரீர்
எங்கள் மேல் இரங்குவீர்

6. நாங்கள் உம்மைக் காணவே
அருள் காலம் போமுன்னே
தஞ்சம் ஈயும் இயேசுவே

---

## 47

1. நாற்பது நாள் ராப்பகல்
உபவாசம் பண்ணினீர்
நாற்பது நாள் ராப்பகல்
சோதிக்கப்பட்டும் வென்றீர்

2. ஏற்றீர் வெயில் குளிரை
காட்டு மிருகத் துணை
மஞ்சம் உமக்குத் தரை
கல் உமக்குப் பஞ்சணை

3. உம்மைப் போல நாங்களும்
லோகத்தை வெறுக்கவும்
உபவாசம் பண்ணவும்
ஜெபிக்கவும் கற்பியும்

4. சாத்நான் சீறி எதிர்க்கவும்
போதெம் தேகம் ஆவியை
சோர்ந்திடாமல் காத்திடும்
வென்றீரே நீர் அவனே

5. அப்போதெங்கள் ஆவிக்கும்
மா சமாதானம் உண்டாம்
தூதர் கூட்டம் சேவிக்கும்
பாக்கியவான்கள் ஆகுவோம்

..........

## 58

1. ஆண்டவா! பிரசன்னமாகி
ஜீவன் ஊதி உயிர்ப்பியும்
ஆசை காட்டும் தாசர் மீதில்
ஆசீர் வாதம் ஊற்றிடும்

அருள் மாரி எங்கள் பேரில்
வருஷிக்கப் பண்ணுவீர்
ஆசையோடு நிற்கிறோமே
ஆசிர்வாதம் ஊற்றுவீர்

2. தேவரீரின் பாதத்தண்டை
ஆவலோடே கூடினோம்
உந்தன் திவ்விய அபிஷேகம்
நம்பி நாடி அண்டினோம்

3. ஆண்டவா! மெய் பக்தர் செய்யும்
வேண்டுகோளை கேட்கிறீர்
அன்பின் ஸ்சுவாலை எங்கள் நெஞ்சில்
இன்று மூட்டி நிற்கிறீர்

4. தாசர் தரும் அபிஷேகம்
இயேசுவே! கடாட்சியும்
பெந்தேகோஸ்தின் திவ்விய ஈவை
தந்து ஆசீர்வதியும்

---

# 39 கிறிஸ்துவின் சிலுவைத் தியானம்

## 1ம் வார்த்தை

இராகம் (வாராவினை வந்தாலும்)

சாமி இவர்க்கிதை மன்னியும் சாமி

1. சாமி எனவறியாமல் செய்தார்கள்
சற்றுமிரக்க மற்றேயிருந்தார்கள்

2. தாங்கள் செய்வதின்ன தென்றறியார்கள்
தற்பரனும்மை இங்காரறிவார்கள்

3. முள்முடி சூட்டி எனைப் பழித்தார்கள்
மூங்கிலெடுத்ததன் மேலடித்தார்கள்

4. நீசச் சண்டாளரென கண் கட்டினார்கள்
நீ சொல்லிப் போடெனவே குட்டினார்கள்

5. கன்னத்தடித்து கதிக்க வைத்தார்கள்
மன்னனே என்று பகடி செய்தார்

6. எந்தன் முகத்திலே துப்பினார்கள்
எத்தனையோ எத்தனையோ செப்பினார்கள்

7. பொய்யான சாட்சிகளைக் கூட்டினார்கள்
போதனை செய்து குற்றம் சாட்டினார்கள்

8. வாரதினாலெனையே அடித்தார்கள்
வாதை அநேகஞ் செய்தே முடித்தார்கள்

9. பாதகன் செய்தவனை விடுத்தார்கள்
பாழ் மரத்தை எனின் மேலே கொண்டார்கள்

10. கால் கரத்தாணி கடாவி வைத்தார்கள்
கள்ளர் நடுவில் மரிக்க வைத்தார்கள்

11. வஸ்திரமெல்லாம் முரிந்து கொண்டார்கள்
கஸ்திப் படுத்தி வதைத்துக் கொன்றார்கள்

---

60 ## 2ம் வார்த்தை

இராகம் (இம்மணர்க் குன்னருள் ஈபரவாசா)

### பல்லவி

இன்றே நீ என்னுடன் இருப்பாய் பரதீசில்
என்ற நல்வாக்கு இப்பாவிக்கும் ஈந்தருள்

1. கர்த்தாவும் ராஜ்யத்தில் சேரும்போதென்னையும்
கருத்தில் வையெனக் கெஞ்சும் கள்ளன் பெற்றாற்போல்

2. கொல்லும் உன் பகைவர்க்குக் கூறும் மன்னிப்பைக்
கூர்ந்து கள்ளன் கேட்டுக் குணப்படும் தன்மையாய்

3. குருசின் உன் ரூபத்தைக் கொலேஞன் அகம்பதித்து
உருகியே அவ்னெஞ்சம் உனைப் பற்றுச் செய்தாயே

---

61 ## 3ம் வார்த்தை

1. ஐயோ என் செல்வச் சீராள சிகாமணியை
சிலுவையில் மடியவிட்டு — ஓகோ
கொடுமையாய் அடிமை நான் குவலய மீதினில்
கூவென்றலறி நிற்கின்றேன்

2. பெற்றதில்லையென்று பெண்கள் நகைத்தாலும்
பேதை துயரில்லையோ — ஓகோ
பெற்றதினல் மெத்தப் பெருந்துயர் வாதைகள்
பெரிதாயடையலாச்சோ

3. அன்று அம்மனசு கிருபை பெற்றவளென்றார்
இதுவோ கிருபையம்மா — ஓகோ
அன்று சிமியோன் சொன்ன மொழி தவறாமலே
வந்து பலித்ததுவோ

4. மூன்றரை ஆண்டாக முக்கிய நன்மைகள்
மிகப் பெற்ற யூதாசே — ஓகோ
முப்பது வெள்ளிக்காய் முத்தமிட்டு அங்கே
மூர்க்கரைக் கூட்டி வந்தாய்

---

## 62 4ம் வார்த்தை

ஏலி ஏலி லாமா சபக்தானி
சால மெஞ்ஞானி சர்வத்தைத் தியானி

1. நேச குமாரன் என்று சொன்னீரே
பாசமில்லையோ பரம செங்கோலா — ஏலி
2. பலர் படும் பாட்டை ஒருவர் சுமந்தால்
நில்லக்குமோ தேகம் ஒரு நிமிஷ நேரம் — ஏலி
3. மகனையுமறக்க மனமும் வந்ததுவோ
ஜெகத்தோர்க்காய் வந்த தன் பலனிதுவோ — ஏலி
4. பாவிகள் படும் பாடுபோதாதோ
காவலனீரும் கைவிடவேதோ — ஏலி

---

## 63 5ம் வார்த்தை

இராகம் (உந்தன் ஆவியே சுவாமி)

தாகமானீரோ இயேசு தற்பரா சுவாமி
தாரணியோர் மேல் கடும் தாகமானீரோ

1. நித்திய ஜீவ நதி நீருறுணியே
நீசக் குருசில் சுவாமி தாகமானீரோ — தாக
2. கடற்களானே கடும் காடியே உமக்
கான மானுகும் நல்ல கர்த்தனே சுவாமி
3. பாவியடியேன் உம்மில் பாசநேசமாய்
ஞான தாகத்தில் வெகு நாட்டங் கொண்டீரோ — தாக
4. நாவும் வறண்டு மேல் நாவோடே ஒட்டி
நாதனே நீரும் பட்டபாடுகளின்றி — தாக
5. உந்தன் மாமிசம் ரத்தம் போஜனபானம்
எந்தன் ஜீவனுக்கென்று மேற்றதாய்க் கொள்ள — தாக

## 64 6ம் வார்த்தை

### பல்லவி

முடிந்த தென்றீரே ஐயா
முன்னாள் வினையானதெல்லாம்

1. தேவப்பிதா சித்தமதைத் திட்டமாகவே
செய்து நிறைவேற்றி இப்போ சிலுவை மீதேறி நின்று
—முடிந்த

2. பூரணரான இயேசு புண்ணிய கிரியையை
பூர்த்தியாய் செய்து இப்போ பூமி விட்டேகு முன்னே
— முடிந்த

3. வேண்டிய பாடனைத்தும் வேதனை நீரும்
தண்டியே உத்தரித்துத் தாரணி விட்டேகு முன்னே
— முடிந்த

4. தேவ கற்பனைகளெல்லாம் திட்டமாகவே
செய்தேன் மரண வாயில் செப்பவே இந்த வார்த்தை
—முடிந்த

---

## 65 கிறிஸ்துவின் மரணம்

### பல்லவி

பார் பார் பார் தேவ ஜீவன் போகுது பார்

1. கண்விழி வீழ்ந்திட கைகளயர்ந்திட கால் கரம் சாய்ந்து விழ
விண்ணொளி மங்கி ஆவி பிரிந்து திருமேனி குளிர்ந்திடுதே
— பார்

2. பஞ்சகாயங்களில் செஞ்சுனைபாயுது பாவி நெஞ்சைக் கழுவ
சஞ்சீவி பஞ்சப் பிரளயம் சாடுது தற்பரன் பக்கத்திலே
—பார்

3. ஜீவ நதியிலே ஏழு தர முங்கு தீரும் உன் பாவக்குஷ்டம்
ஆவலுடன் சொன்னேன் செல்வர் சொன்னார் ஐயா
அதோ — பார்

**66**

1. துதித்துப் பாடிடப் பாத்திரமே
துங்கவன் இயேசுவின் நாமமதே
துதிகளின் மத்தியில் வாசஞ் செய்யும்
தாயனை நேயமாய் ஸ்தோத்திரிப் போமே

ஆ! அற்புதமே அவர் நடத்துதலே
ஆனந்தமே பர மானந்தமே
நன்றியால் உள்ளமே மிகப் பொங்கிடுதே
நாம் அல்லேலூயா துதி சாற்றிடுவோம்

2. கடந்த நாட்களில் கண் மணி போல்
கருத்துடன் நம்மை காத்தாரே
கர்த்தரையே நம்பி ஜீவத்திட
கிருபையும் ஈந்ததால் ஸ்தோத்தரிப் போமே

3. அக்கினி ஊடாய் நடந்தாலும்
ஆழியில் தண்ணீரைக் கடந்தாலும்
சோதனையோ மிகப் பெருகினாலும்
ஜெயம் நமக்கீந்ததால் ஸ்தோத்தரிப் போமே

4. இந்த வனாந்திர யாத்திரையில்
இன்பராம் இயேசு நம் மோடிருப்பார்
போகையிலும் நாம் வருகையிலும்
புகலிடம் ஆனதால் ஸ்தோத்தரிப் போமே — ஆ அற்

**67**

கர்த்தர் என் மேய்ப்பரே
குறை எனக் கில்லையே
அனுதினம் நல் மேய்ச்சல்
அன்புடன் அளித்திடுவார்

1. மரணத்தின் இருள் தன்னில்
நடந்திட நேர்ந்தாலும்
மீட்பரின் துணையுடனே
மகிழ்வுடன் நடந்திடுவேன்

2. பகைவரின் கண்களின் முன்
பரமன் எனக் கோர் விருந்தை
பாங்குடன் அருளுகின்றார்
பரவசம் கொள்ளுகிறேன்

3. எண்ணெயால் என் தலையை
இன்பமாய் அபிஷேகம்
செய்கிறார் என் தேவன்
உள்ளமும் பொங்கிடுதே

4. ஜீவனின் நாட்களெல்லாம்
நன்மையும் கிருபையுமே
தொடர்ந்திட வாழ்ந்திடுவேன்
கர்த்தரின் வீட்டினிலே

---

## 68

என் தேவன் என்வெளிச்சம்
என்னை இரட்சிப்ப வருமவரே
என் ஜீவனுக் கரணணவர்
நான் யாருக்கும் அஞ்சமாட்டேன்

1. தீமை செய்கின்றவர்கள் எனக்கு
தீமைசெய்ய விரும்புகையில்
என் தேவன் அருகில் நின்று காத்து நின்றார்
என்னைபகைத்தவர்கள் உடனே அழிவார்கள் — என்

2. தாயும் தந்தையும் தள்ளிவிட்டாலும்
தந்தை ஏசென்னை சேர்த்துக் கொள்வார்
என்னை அவர் நிழலில் வைத்துக் காத்திடுவார்
என்றும் நன்மையினால் என்னை நடத்திடுவார் — என்

3. தீங்குநாளில் அவர் என்னை மறைத்து
தம் கரத்தினால் தாங்கிடுவார்
தம் கூடாரமறைவிலே ஒளித்துவைத்து
செவ்வையான பாதையில் நித்தம் நடத்திடுவார் — என்

4. உம்கிருபையிலே களிகூர்ந்து
வீண் மாயையை வெறுத்திடுவோம்
விண் உலகத்தின் வாழ்வை விரும்பியே நாம்
விசுவாசத்திலே என்றும் ஸ்திரப்படுவோம் — என்

---

## 69

1. தூய ஆவியானவர் இறங்கும்
துரிதமாக வந்திறங்கும்
தடையாவையும் தயவாய் நீக்கி இறங்கும்

பரிசுத்தப் பிதாவே இறங்கும்
இயேசுவின் மூலம் இறங்கும்.

2. பல பல வருடங்கள் கழிந்தும்
பாரினில் இன்னும் இருளும்
அகலவில்லை எனவே நீரே இறங்கும்

3. ஜெயிப்பவர் பலரையும் எழுப்பும்
கிறிஸ்தவ சமூகத்தைத் திருத்தும்
தயாபரனே தயவாய் வேகம் இறங்கும்

4. ஐந்து கண்டம் வாழும் மனிதர்
ஐந்து காயம் காண இறங்கும்
பாடு பட்டநாதரே இன்றே இறங்கும்.

---

## 70

சந்தோஷ கீதம் என்னில் பொங்குதே
சர்வ வல்ல இயேசு என்னை நேசித்தார்
பெற்றதாம் நன்மைகள் ஒவ்வொன்றாய் எண்ணியே
பேரின்ப கீதம் என்னில் பாடுவேன்

### அனுபல்லவி

ஆர்ப் பரித்துநான் ஆனந்தம் கொள்வேன்
ஆண்டவர் சமூகம் என்னைத் தேற்றுதே
துன்பங்கள் யாவுமே துரிதமாய் நீங்குதே
இன்ப இயேசு நாமத்தில்

1. பேரின்ப கீதம் என்னில் பொங்குதே
போன ஆண்டு என்னைக் கர்த்தர் தாங்கினர்
சோதனை சூழ்ந்து என் நம்பிக்கை குன்றினும்
சோர்ந்தழியாமல் என்றும் காத்ததால் —ஆர்ப்பரி

2. இரட்சிப்பின் கீதம் என்னில் பொங்குதே
இரட்சகர் என் பாவம் முற்றும் மன்னித்தார்
மானிடர் மாறினும் அன்பை விட்டோடினும்
மாதேவ அன்பில் என்னைக் காத்ததால் —ஆர்ப்பரி

3. ஆனந்தக் கீதம் என்னில் பொங்குதே
ஆரவாரத் தோடே இயேசு தோன்றுவார்
ஆவலாய் விழித்தே ஆவியில் ஜெபித்தே
ஆயத்தமாய் நான் காத்து நிற்பதால் —ஆர்ப்பரி

4. சீயோனின் கீதம் என்னில் பொங்குதே
சீக்கிரம் வந்தென்னை சேர்த்துக் கொள்ளுவார்
பொன்முடி வேந்தனும் எந்தை என் இயேசுவின்
பொன் மாளிகை நான் கிட்டிச் சேர்வதால் —ஆர்ப்பரி

---

**71**

1. இருள் சூழும் காலம் இனி வருதே
அருள் உள்ள நாட்கள் பயன்படுத்தும்
திறவுண்ட வாசல் அடைபடு முன்
நொறுங்குண்ட மன தாய் முன் செல்வோர் யார்?

திறவுண்ட வாசல் அடை படுமுன்
நொறுங்குண்ட மன தாய் முன் செல்வோர் யார்?
நாட்கள் கொடியதாய் மாறிடுதே
காலத்தை ஆதாயம் செய்திடுவோம்

2. தரிசு நிலங்கள் அநேகம் உண்டு
தரிசனம் பெற்றோர் நீர் முன் வருவீர்
பரிசாக இயேசுவை அவர்களுக்கும்
அளித்திட அன்பினல் எழுந்து செல்வீர்

3. எத்தனை நாடுகள் இந்நாட்களில்
கர்த்தரின் பணிக்குத் தான் கதவடைத்தார்
திறந்த வாசல் இன்று உனக் கெதிரில்
பயன்படுத்தும் மக்கள் ஞானவான்கள்

4. விசுவாசிகள் எனும் கூட்டம் உண்டு
அன்பு ஒன்றே அவர் நடுவில் உண்டு
ஒருமனம் ஒற்றுமை அங்கு உண்டு
என்று சொல்லும் நாட்கள் இன்று வேண்டும்

5. இயேசுவே எங்கள் உள்ளங்களை
அன்பெனும் ஆவியால் நிறைத்திடுமே
இந்தியாவின் எல்லாத் தெருக்களிலும்
இயேசுவின் நாமமும் விரைந்திடுமே.

---

## 72

ஆட்கொள்ளுவீர் தேவா நீரே!
ஆட்கொள்ளுவீர் இன்றும் என்றுமே

1. பாவி எந்தன் பாவம் போக்கும் இந்நேரமே
பாசம் வைத்தென்னைச் சொந்தமாய்
ஏற்றுக் கொள்ளுமேன்.

2. ஆவி ஆத்மா என் உடலும் உம் சொந்தமே
ஆறுதலின் ஆவிநீர் என் சொந்தமே

3. ஆத்மா தாயம் செய்ய பெலன் எந்தனுக்கே
அருள் செய்குவீர் எந்நாளும் நின் மகிமைக்கே.

---

## 73

1. கர்த்தரின் கை குறுக வில்லை
கர்த்தரின் வாக்கு மாறிடாதே
சுத்தர்களாய் மாறிடவே

சுதன் அருள் புரிந்தனரே
விசுவாசியே நீ பதருதே | 2
விசுவாசியே நீ கலங்காதே

விசுவாசத்தால் நீதிமான்
இன்றும் என்றும் பிழைப்பான் | 2

2. பரிசுத்த ஆவியான வரே
பரிசுத்த பாதையில் நடத்திடுவார்.
கிருபையிலே வளர்ந்திடுவோம்
வரங்களை நாடிடுவோம் | 2

— விசுவாசியே.

3. திருச்சபையே கிரியை செய்வாய்
திவ்ய அன்பில் பெருகிடுவாய்
தலைமுறையாய் தலைமுறையாய்
தழைத்திட அருள் புரிவார். | 2

— விசுவாசியே

4. நெஞ்சமே நீ அஞ்சிடாதே
தஞ்சம் இயேசு உன் அரணே
தம் ஜனத்தை சீக்கிரமாய்
தம்முடன் சேர்த்துக் கொள்வார் | 2

— விசுவாசியே

5. மேகம் போன்ற வாக்குத்தத்தம்
சூழ நின்றே காத்திருக்க
விசுவாசத்தால் உரிமை கொள்வாய்
விரைந்து முன் ஏகிடுவாய் | 2

— விசுவாசியே

71

## பல்லவி

மான்கள் நீரோடை வாஞ்சித்து
கதறும் போல் தேவனே
எந்தன் ஆத்துமா உம்மையே
வாஞ்சித்து கதறுமே

## அனுபல்லவி

தஞ்சமே நீர் அடைக்கலம் நீர்
கோட்டையும் நீர் என்றும் காப்பீர் | 2

**சரணங்கள்**

1. தேவன் மேல் ஆத்துமமே
தாகமா யிருக்கிறது
தேவனின் சந்நிதியில் நின்றிட
ஆத்துமா வாஞ்சிக்குதே — மான்கள்

2. ஆத்துமா கலங்குவதேன்
நேசரை நினைத்திடுவாய்
அவரின் இரட்சிப்பினால் தினமும்
துதித்துப் போற்றிடுவாய் — மான்கள்

3. யோர்தான் தேசத்திலும்
எர்மோன் மலைகளிலும்
சிறு மலைகளிலிருந்தும் உம்மை
நிதமும் நினைத்திடுவேன் — மான்கள்

4. தேவரீர் பகற்காலத்தில்
கிருபையைத் தருகின்றீர்
இரவினில் பாடும்பாட்டு எந்தன்
வாயினிலிருக்கிறது — மான்கள்

5. கன்மலையான தேவன்
நீர் என்னை ஏன் மறந்தீர்
எதிரிகளால் ஒடுங்கி அடியேன்
துக்கத்தால் திரிவதேனோ — மான்கள்

---

## 75

என் ஆத்தும நேசர் இயேசுவை
நான் அண்டிக் கொள்வேனே. (௨)

1. நிலையில்லா என்னைக் கண்டிட்டார்
நித்திய வழிக்குள் நடத்திட்டார்
விலையில்லா இரத்தம் சிந்தினார்
விந்தையாய் என்னை சந்தித்தார்
பரகதி வாழ்வைத் தந்தவர்
பரமன் இயேசு கர்த்தரே
நித்திய வழிக்குள் நடத்தினவர்

நிதம் அவர் துதி நான் பாடிடுவேன்
அல்லேலூயா அல்லேலூயா
அல்லேலூயா அல்லேலூயா —என் ஆத்தும

2. பாவத்தைக் கழுவி பரிகரித்தார்
சாபத்தை நீக்கி சங்கரித்தார்
லாபம் இன்றென் ஜீவனே
தாபம் எனக்கினி அவர் தானே — பரகதி

3. என்னையே மீட்ட என் இயேசு
தன்னையே தியாகம் செய்தாரே.
அன்னையாய் அப்பனுய் ஆனவர்
உன்னையும் அன்பாய் அழைக்கிருர் — பரகதி

---

**76**

வழி நடத்தும் வல்ல தேவன் வாழ்வில் நாயகனே
வாழ்வில் நாயகனே - நம் தாழ்வில் நாயகனே

## சரணங்கள்

1. பரதேச பிரயாணிகளே நாம் வாழ்வில் பாரினிலே
பரமானந்தத்தோடே செல்வோம்
பரமன் நாட்டினிற்கே — இயேசு
பரன் தம் வீட்டினிற்கே — வழி

2. போகும் வழியைக் காட்டி நல்ல போதனை செய்வார்
ஏகும் சுத்தர் மீது கண்கள்
இருத்தி நடத்துவார் — இயேசு
திருத்தி நடத்துவார் — வழி

3. அந்தகார சக்திகள் எமை அணுகிடாமலே
சொந்தமான தம் ஜனத்தை
சூழ்ந்து காப்பாரே — இயேசு
துணையாய் நிற்பாரே — வழி

4. வாதை நோய்கள் வன்துன்பங்கள் வருத்திய போதும்
பாதையில் நாம் சோர்ந்திடாமல்
பலப்படுத்திடுவார் — இயேசு
திடப்படுத்திடுவார் — வழி

5. காடானாலும் மேடானாலும் கடந்து சென்றிடுவோம்
பாடானாலும் பாடி செல்வோம்
பரவசமுடனே — இயேசு
பரன் தான் நம்முடனே — வழி

6. அன்றன்றுள்ள தேவன் தந்து ஆதரிப்பாரே
என்றென்றும் துதி கனமும்
மகிமையவர்க்கே — இயேசு
மகிபனுமவர்க்கே — வழி

## 77

1. தொல்லைகள் கஷ்டங்கள் சூழ்ந்திடும்
துன்பம் துக்கம் வரும்
இன்பத்தில் துன்பம் நேர்ந்திடும்
இருளாய்த் தோன்றும் எங்கும்
சோதனை வரும் வேளையில்
சொற்கேட்டும் செவியிலே
பரத்திலிருந்து ஜெயம் வரும்
பரன் என்னைக் காக்க வல்லோர்

### பல்லவி

3

காக்கும் வல்ல மீட்பர் உண்டெனக்கு
காத்திடுவார் என்றுமே

2. ஐயமிருந்த தோர் காலத்தில்
ஆவிக்குறைவால் தான்
மீட்பர் உதிர பெலத்தால்
சத்துருவை வென்றேன்
என் பயம் யாவும் நீங்கிற்று
இயேசு கைத் தூக்கினார்
முற்றும் என் உள்ளம் மாறிற்று
இயேசென்னைக் காக்கவல்லோர் — காக்கும்

3. என்ன வந்தாலும் நம்புவேன்
என் நேச மீட்பரை
யார் கைவிட்டாலும் பின் செல்வேன்
எனது இயேசுவை

அகல ஆழ உயரமாய்
எவ்வளவன்பு கூர்ந்தார்
என்ன துன்பங்கள் வந்தாலும்
என்னை கைவிடமாட்டார் — காக்கும்

---

79

கொடு உனக்கு கொடுக்கப்படும்
அள உனக்கு அளக்கப்படும்
அமுக்கி குலுக்கி சரிந்து விழும் படிக்கே
அதனின் பலனை அடைந்திடுவாய் - (2)

1. விதவை கொடுத்ததை அறிவாயோ — ஏழை
விதவை கொடுத்ததை அறிவாயோ.
இரண்டே காசு, இரண்டே காசு
உள்ளதை எல்லாம் கொடுத்தாளே —ஆனால்
அது போல் நீயும் கொடு

2. மரியாள் கொடுத்ததை அறிவாயோ - பெத்தானி
மரியாள் கொடுத்ததை அறிவாயோ
வெள்ளைக்கல் பரணி பரிமள தைலம்
இயன்றதை எல்லாம் கொடுத்தாளே — ஆனால்
அது போல் நீயும் கொடு

3. சிறுவன் கொடுத்ததை அறிவாயோ — அன்று
சிறுவன் கொடுத்ததை அறிவாயோ
ஐந்தே அப்பம் இரண்டே மீன்கள்
மனப்பூர்வத்தோடு கொடுத்தானே — ஆனால்
அது போல் நீயும் கொடு

4. தேவராஜ்யம் பெருகிடவே — இங்கு
தேவராஜ்யம் பெருகிடவே
ஊழியம் வளர ஊழியர் உழைக்க
உன்னிடம் உள்ளதை உவந்தளிப்பாய் — இப்போ எனவே
நீயும் கொடு

---

79 மகிழ்வோம் மகிழ்வோம் தினம் அகமகிழ்வோம்
இயேசு ராஜன் நம் சொந்தமாயினர்
இந்த பார்தலத்தின் சொந்தக்காரர் அவர்
எந்தன் உள்ளத்தில் சொந்தமானர்

ஆ... ஆ... ஆனந்தமே
பரமானந்தமே இது மாபெரும் பாக்கியமே
இந்த பார்தலத்தின் சொந்தக்காரர் அவர்
எந்தன் உள்ளத்தில் சொந்தமானர்

2. சின்னஞ் சிறு வயதில் என்னைக் குறித்து விட்டார்
தூரம் போயினும் கண்டு கொண்டார்
தமது ஜீவனை எனக்கும் அளித்து
ஜீவன் பெற்றுக் கொள் என்றுரைத்தார்

3. எந்த சூழ்நிலையும் அவர் அன்பினின்று
என்னைப் பிரிக்காது காத்துக் கொள்வேன்.
என்னை நம்பி அவர் தந்த பொறுப்பதனை
அவர் வரும் வரை காத்துக் கொள்வேன்

4. அவர் வரும் நாளினில் என்னைக் கரம் அசைத்து
அன்பாய் கூப்பிட்டு சேர்த்துக்கொள்வார்
அவர் சமுகமதில் அங்கே அவருடனே
ஆடிப் பாடியே மகிழ்ந்திடுவேன்

OOOOO

80 இஸ்ரவேலென் ஜனமே என்றும் இடறிட வேண்டாம்
ஏகோவா உன் தெய்வமானல் ஏதும் பயம் வேண்டாம்

சரணங்கள்

1. ஓங்கும் புயமும் பலத்த கரமும் உன் பக்கமே உண்டு
தாங்கும் கிருபை தயவு இரக்கம் தாராளமாயுண்டு

2. பார்வோன் கைக்கு விலக்கி மீட்ட பஸ்கா ஆட்டுக்குட்டி
ஆரோன் மோசே என்னும் நல்ல ஆசாரியர் உண்டு

3. செங்கடலில் வழி திறந்த சீயோன் நாயகனே
பங்கமின்றி பாலைவனத்தில் பராமரித்தாரே

4. சத்துருக்களை சிதறடித்த சர்வ வல்ல தேவன்
யுத்தத்தில் உன் முன்னே நின்று ஜெயமளித்தாரே

5. பயப்படாதே சிறு மந்தையே பார் நான் உன் மேய்ப்பன்
தயங்காதே மனம் கலங்காதே உன் தேவன் தினம் காப்பேன்

81

எம் உயர்ந்த வாசஸ்தலமதுவே
எம் பூரண சீயோனே

## அனுபல்லவி

கன் மலையின் மேலே கழுகு போல்
உன்னதத்தில் வாழ்வோம் — இயேசு
பக்தர்களே ஜெயம் பெற்றே
பிதா முகம் காண்போம்

## சரணங்கள்

1. ஞானக் கன்மலையே கிறிஸ்தேசு எம் அரணே
வான சீயோனிலே அவர் ஆவியால் பிறந்தோம்
ஏழு தூண்களுடன் திட அஸ்திபாரமுடன்
ஏசுவின் மேல் நின்ற வீடாய் நாம் இலங்கிடுவோம் —எம்

2. அன்பின் பூரணமே அதிலே பயமில்லையே
அன்பர் ஏசுவிடம் அதை நாடி பெற்றிடவே
ஆவியால் நிறைந்தே அவர் அன்பிலே நடந்தே
ஆ பேரின்ப ஆத்ம வாழ்வில் ஆனந்தங் கொள்வோம்
— எம்

3. மா சமாதானமே விசுவாச நம்பிக்கையே
மா பரிசுத்தமே மரணத்தின் பாடுகளே
தேவ சாயலுமே நம்மில் பூரணம் அடைய
தூய வாழ்வை நாடி நாம் முன்னேறியே செல்வோம்
— எம்

4. ஓட்டமே ஜெயமாய் நாமும் ஓடியேமுடிக்க
ஒவ்வொரு தினமும் புதிய பெலனடைவோம்
பாவ சாபங்களும் புவி ஆசையும் ஜெயித்தோர்
பாழுலகை வேகம் தாண்டி அக்கரை சேர்வோம் — எம்

5. வாலையும் சுழற்றி வலு சர்ப்பம் தோன்றிடுதே
வீர ஆண்பிள்ளையை விழுங்க வகை தேடுதே.
வான அக்கினியால் அதை நீக்கொளுத்திடுவோம்
வல்லமை மிகுந்த கர்த்தர் இயேசு நாமத்திலே — எம்

6. வானங்கள் வழியே இறங்கி பரன் வருவார்
வாஞ்சையாய் சபையாய் அன்று இயேசுவை சந்திப்போம்
மீட்பின் நாள் நெருங்க தலைகள் உயர்த்திடுவோம்
மத்திய வான விருந்தில் பங்கடைந்திடுவோம் — எம்

---

82 என் தேவனாகிய கர்த்தாவே
உம்மை என்றென்றைக்கும் துதிப்பேன்
அல்லேலூயா — 4 | 2

1. கர்த்தாவே என் சத்துருக்கள் என்னை
மேற்கொண்டு மகிழவிடால் | 2
நீர் என்னை கை தூக்கி எடுத்தபடியால்
நான் உம்மை என்றென்றும் போற்றுவேன்—என்

2. உம்மை நான் நோக்கி கூப்பிட
நீர் என்னை குணமாக்கினீர் | 2
பாதாளத்திலிருந்தென்னை ஏறப்பண்ணி
என்னை உயிருடன் காத்தீர் — என்

3. கர்த்தரின் சுத்தவான்களே
அவரைக் கீர்த்தனம் பண்ணிடுங்கள் | 2
அவர் பரிசுத்தத்தின் நினைவுகளை
ஆடிப்பாடியே கொண்டாடுங்கள் — என்

4. காத்தாவே உம்மை கூப்பிட்டேன்
கர்த்தரை நோக்கிக் கெஞ்சினேன் | 2
என் புலம்பலை நீர் களிப்பாக மாற்றி
களிப்பின் கட்டினால் கட்டினீர் — என்

---

83 கல்வாரி நாயகா — கருணையின் வடிவம் தேவா!
காசினி மீதென்னை நேசக்கரம் நீட்டி
பாசமாய் மீட்டீரே! | 2

1. என் பாவம் யாவையுமே — மன்னித்து மறந்தீரே! (2)
உம் ரத்தம் சிந்தி என்னையும், மீட்டு கிருபையாய்
ரட்சித்தீரே! (2)
— கல்வாரி

2. உலகத்தின் மாய்கையில் நான் வீழ்ந்து மடியாமலே (2)
உம் கரம் நீட்டி. என்னையும் மீட்டு கிருபையாய்
அரவணைத்தீர்! (2) — கல்வாரி

3. துன்பம் துயர் வரினும் தாங்கிட பெலனளித்தீர் (2)
சோர்வுறும் நேரம், அன்புடன் தேற்றி,
அருமையாய் அரவணைத்தீர் (2)
— கல்வாரி

---

**84**

சுமை சுமந்து சோர்ந்திருப்போரே,
வாருங்கள் நம் ஆண்டவர் அழைக்கின்றார்
இளைப்பாற்றிக் கொடுக்கின்றார்
ஆ...ஆ ... ஆ... ஆ...

1. இருகரம் விரித்தவராய்
இதயத்தைத் திறந்தவராய்
இறைவன் இருக்கின்றார்
இனியும் தாமதமேன் — சுமை

2. வரும் வழி பார்த்தவராய்
வரம் மழை பொழிந்தவராய்
வந்தவர் இருக்கின்றார்
விரைந்திடத் தாமதமேன் — சுமை

3. துயரினில் ஆறுதலாய்
நோயினில் மருத்துவராய்
அடிமையின் விடுதலையாய்
ஆண்டவர் இருக்கின்றார் — சுமை

4. வறுமையில் விருந்தெனவே
வெறுமையில் மகிழ்வெனவே
வேந்தன் இருக்கின்றார்
வந்திடத் தாமதமேன் — சுமை

---

**85**

அலைந்தேன் உலகிலே — அறியாத இடம்தேடி
நல்ல மேய்ப்பனாக வந்து — என்னை மீட்டீரே
பாதை தெரியாத ஆட்டைப்போல
அலைந்தேன் உலகிலே
நல்ல மேய்ப்பனாக வந்து
என்னை மீட்டீரே | 2

1. கலங்கினேன் நீர் என்னைக் கண்டீர்
பதறினேன் நீர் என்னைப் பார்த்தீர் | 2
கல்வாரியினண்டை வந்தேன்
என் பாவம் தீர நான் அழுதேன் | 2 —பாதை

2 என் காயம் பார்த்திடு என்றீர்
உன் காயம் மாறிடும் என்றீர் | 2
நம்பிக்கை யோடே நீ வந்தால்
துணையாக இருப்பேனே என்றீர் | 2 —பாதை

---

**86**

1. புத்திக் கெட்டாத அன்பின் வாரி பாரும்
உம் பாதம் அண்டினோமே தேவரீர்
விவாகத்தால் இணைக்கும் இருபேரும்
ஒன்றாக வாழும் அன்பை ஈகுவீர்

2. பூலோகத் துன்பம் இன்பமாக மாற்றி
மெய்ச் சமாதானம் ஈந்து தேற்றுவீர்
வாழ்நாளின் ஈற்றில் மோட்ச கரையேற்றி
நிறைந்த ஜீவன் அன்பு நல்குவீர்

—ஆமென்

தேவரீர் உம் சமாதானம்
என்னில் தாருமே
வெறுப்பினில் உம் அன்பையும்
விரோதத்தில் மன்னிப்பையும்

காரிருளில் ஒளியையும்
துக்கத்தினில் களிப்பையும்
கொடுக்கும் உம் சமாதானம்
கருவியாக மாற்றிடும் — 2

## 87

### அனுபல்லவி

தேவனைத் துதியுங்கள், நம் தேவனைத் துதியுங்கள்
தூயோனை வாழ்த்துங்கள் நம் தேவனைப் போற்றுங்கள்

### பல்லவி

போற்றுவோம் ...... புகழுவோம் ......
வாழ்த்துவோம் ...... வணங்குவோம்
தேவாதி தேவனை நாம் வாழ்த்தி வணங்கிடுவோம்

1 நூறாண்டு காணச்செய்தார் நாம் துதிபுகழ் பாடச்செய்தார்.
தாழ்மையின் கோலமதாய் நம்மைத் தயவுடன் மீட்ட கர்த்தர்
—போற்று

2 வாகைக்குளம் சபையை வளர்ந்து பெருகச்செய்தார்.
வானவர்க்காய் ஜீவிக்க நம்மை வழிகாட்டி நடத்திவந்தார்
—போற்று

3 திருமண்டலம் தழைக்க தேவனை வணங்கிடுவோம்
தேவனை உலகறிய செய்திடுவோம் நாமும்—போற்று

4 ஓங்கிய கோபுரம் போல் உலகில் ஒளி வீசி
தாங்கியே தரணியை நாம் தற்பரன் ஆளச்செய்வோம்
—போற்று

---

## 88

இயேசுவின் நாமத்தில் கூடிவந்தோம்
திரியேக தேவனை ஆராதிப்போம்.
எண்ணில்லா நன்மைகள் நம் வாழ்வில் ஈந்ததால்
என்றென்றும் ஸ்தோத்தரிப்போம் — 2

### சரணங்கள்

1. தேவா உம் கிருபை எத்தனை பெரிது
இயேசுவே உம் அன்பு உயர்ந்தது
அதிசயமானவர் ஆலோசனை கர்த்தர்
அல்லேலூயா உமக்கே — இயேசு

2. உம் அன்பின் அகலம் நீள உயரம்
ஆழம் ஆராய முடியாதே
கருணையின் தேவனே வல்லமை நாதனே
சாற்றிடுவோம் துதியே —இயேசு

3. சோதனை வியாதி சூழ்ந்திடும் நேரம்
தாங்கினீர் உந்தனின் கிருபையால்
நம் பெலவீனத்தில் மா பெலமும் அவர்
அல்லேலூயா துதியே-- —இயேசு

4. ஜெயவேந்தர் இயேசு முன் செல்வதாலே
ஜெயக்கொடி எற்றி நாம் பின் செல்லுவோம்
தேவாசீர்வாதங்கள் என்றும் நிலைத்திட
தேவனை அண்டிக் கொள்வோம் —இயேசு

---

## 89

என் இயேசுவின் சந்நிதியில் -என்றும்
கீதங்கள் பாடிடுவேன்
என்னைக் காத்திடுமே அவர் நாமமிதே
துதி கீதங்கள் பாடிடுவேன் —என்

### சரணங்கள்

1. கண்ணீர் அவர் துடைத்திடுவார்
கருணைக் கரம் தாங்கிடுவார்
எந்தன் கல்வாரி நாயகன் இயேசுவாலே
எல்லாப் பாவங்கள் அகன்றிடுமே —என்

2. பரமன்குரல் கேட்கும்போது
பரமானந்தம் அடைந்திடுவேன்
எந்தன் அவசியங்கள் எல்லாம் அவர் கிருபையால்
அதிசீக்கிரம் கிடைத்திடுமே —என்

---

## 90

ஒரேவழி எந்தன் இயேசுவின் வழி
இன்ப மோட்ச நாட்டை நாம் சேரும்வழி
பாவமில்லா நாடு பரலோக நாடு
அந்நாடுசேர இயேசுவே வழி

### சரணங்கள்

1. பூமியில் பிறந்ததின் நோக்கத்தை நினைத்து
கலங்கி சோர்வாயோ
நோக்கிப்பார் இயேசுவை
நோக்கமும் அர்த்தமும் ஈந்திடுவார் —ஒரேவழி

2. பாவத்தின் பிடியினில் ஆத்துமா தியங்கி
பாரம் சுமப்பாயோ
நோக்கிப்பார் இயேசுவை
பாவமும் பாரமும் நீக்கிடுவார் —ஒரேவழி

3. திரும்பி நீ பார்த்துமே பாவத்தில் விழுந்து
நிம்மதி இழந்தாயோ
நோக்கிப்பார் இயேசுவை
இரட்சிப்பின் சந்தோஷம் தந்திடுவார் —ஒரேவழி

4. பாவத்தின் சம்பளம் மரணத்தை அழிக்க
இயேசு தோன்றினர்
மரித்தோரே உயிர்த்தாரே
பாதையாம் தீபமாய் மாறினரே —ஒரேவழி

---

## 91

முன்னேறிச் செல்வீர் - பின் நோக்காமலே
வென்றேறிச் செல்வீர் - இயேசு நாமத்தில்
செல்லும் எவ்விடம் – ஆட் கொண்டிடுவீர்
வெற்றி வேந்தன் இயேசு ராஜன்
வெற்றி சிறந்தார்

## சரணங்கள்

1. நற்செய்தியினைச் சுமக்கும் பாதங்கள்
மலைகளில் எத்தனை அழகானதே
கர்த்தர் உங்களைக் கடைசி வரைக்கும்
காத்துக் கொள்வார் அணைத்துக் கொள்வார்
ஆசீர்வதிப்பார்
—முன்னேறி

2. பயப்படாதே நீ திகைத்து நில்லாதே
உன்னோடன் எப்போதும் நானிருக்கிறேன்
பெலப்படுத்தி சகாயம்பண்ணி
என் நீதியின் வலது கரத்தால்
உன்னைத் தாங்குவேன்
—முன்னேறி

3. உள்ளங்கைகளில் வரைந்திருக்கிறேன்
என்றுமே எங்குமே நீ என்னுடையவன்
கண்ணின் மணிபோல் காத்துக்கொள்ளுவேன்
வாக்குமாறா இயேசு தேவா
வழி நடத்துவேன்
—முன்னேறி

---

02

## பல்லவி

தேசமே பயப்படாதே
மகிழ்ந்து களிகூரு
சேனையின் கர்த்தர் உன் நடுவில்
பெரிய காரியம் செய்திடுவார்

## சரணங்கள்

1. பலத்தினாலும் அல்லவே
பராக்கிரமும் அல்லவே
ஆவியினாலே ஆகும் என்று
ஆண்டவர் வாக்கு அருளினாரே
—தேசமே

2. தாய் மறந்தாலும் மறவாமல்
உள்ளங்கையில் வரைந்தாரே
வலக் கரத்தாலே தாங்கி உன்னை
சகாயம் செய்து உயர்த்திடுவார் — தேசமே

3. கசந்நா மாரா மதுரமாகும்
கொடியயோர்தான் அகன்றிடும்
நித்தமும் உன்னை நல்வழி நடத்தி
ஆத்துமாவை நிதம் தேற்றிடுவார் — தேசமே

4. கிறிஸ்து இயேசு சிந்தையில்
நிலைத்தே என்றும் ஜீவிப்பாய்
ஆவியின் பெலத்தால் அனுதினம் நிறைந்தே
உத்தம சாட்சியாய் விளங்கிடுவாய் — தேசமே

5. மாமிசமான யாவர் மீதும்
உன்னத ஆவியைப் பொழியுவார்
ஆயிரமாயிரம் ஜனங்கள் தருவார்
எழும்பி சேவையும் செய்திடுவாய் — தேசமே

௳—௭

75

## பல்லவி

கிருபை கிருபை கிருபை பொழிவீர்
தேவா இந்நேரமே எம் மீதிலே

## சரணங்கள்

1. இத்தனை ஆண்டுகள் சுமந்தீரே
எச் சேதமும் எமை அணுகாமல்
இந்தப் புது ஆண்டினையும்
கண்டு களிக்கக் கிருபை செய்தீர் — கிருபை

2. தேவ சித்தம் யாம் செய்திடவே
தேவா உம் கிருபை ஈந்திடுவீர்
எம்மீது உம் கண்ணை வைத்து
ஆலோசனை தந்து நடத்திடுவீர் — கிருபை

3. வளமாக என்றும் வாழ்ந்திடவே
வாடா உம் கிருபை ஊற்றிடுவீர்
நாடோறும் உம் பின் சென்றிட
நாதா உம் பாதை காட்டிடுவீர் — கிருபை

4. ஜெயமான பாதையில் சென்றிடவே
ஜெய கிறிஸ்து நீர் எம் முன் செல்வீரே
ஜெய கீதங்கள் பாடி என்றும்
சேவை செய்யக் கிருபை ஈந்தளிப்பீர் — கிருபை

—O—

94

## பல்லவி

மீட்பர் இயேசுவே - கோரச்
சிலுவை மீதினிலே
குருசில் மரித்தாரே
காயங்கள் அடைந்தே — மீட்பர்

## சரணங்கள்

1. கால்கள் கைகளிலே
ஆணிகள் அறைந்தனரே
முட்கிரீடம் சூடியே மூன்றாணி மீதிலே
கர்த்தர் இயேசு தொங்கினார் — மீட்பர்

2. கள்ளர் மத்தியிலே
கள்ளன் போல் தொங்கினாரே
இத்தனை பாடுகள் உந்தனின் வாழ்வுக்காய்
சொந்தமாய் ஏற்றுக் கொண்டார் — மீட்பர்

3. இரத்த வெள்ளத்திலே
அன்பின் வெள்ளம் பாய்ந்திடுதே
அலைந்து திரிந்திடும் ஆடுகட்காகவே
நல்மேய்ப்பர் பலியானார் — மீட்பர்

4. பாவ சாபங்களும்
தீரா ரோகங்கள் அனைத்தும்
சுமந்தார் சிலுவையில் தம் சரீரமதிலே
இன்றே சுகமடைவாய் — மீட்பர்

5. பேரின்ப வாழ்வதனை
பெற்று நீயும் ஆனந்திக்க
நேசர் இயேசுவை இன்றே நம்பி வந்திடுவாயே
பாசமாய் ஏற்றுக் கொள்வார் — மீட்பர்

95

## பல்லவி

மகிழ்ந்திடுவேன் நான் கர்த்தருக்குள்
களி கூறுவேன் என் தேவனுக்குள்
இரட்சிப்பின் தேவனுக்குள்
ஆமென் அல்லேலூயா — 4

## சரணங்கள்

1. அத்தி மரம் துளிர் விடாமற் போனாலும்
திராட்சைச் செடி பழம் இல்லாமல் போனாலும்
— மகிழ்ந்திடுவேன்

2. ஒலிவ மரத்தின் பலன் அற்றுப் போனாலும்
வயல்களில் தானியம் விளையாமற் போனாலும்
— மகிழ்ந்திடுவேன்

3. இடையில் ஆடுகள் முதலற்றுப் போனாலும்
தொழுவத்தில் மாடுகள் இல்லாமற் போனாலும்
— மகிழ்ந்திடுவேன்

96

## பல்லவி

அனைத்தையும் வெல்பவர் கிறிஸ்து (2)
அனைத்தையும் ஆள்பவர் கிறிஸ்து (2)
அனைத்தையும் ஆள்பவராம்
கிறிஸ்து நாதரே

## சரணங்கள்

1. சிலுவையில் வீரர் சிலுவையில் தியாகம்
சிலுவையிலே நம் விடுதலையாம்
கிறிஸ்து நாதரே } 2
— அனைத்தையும்

2. சிலுவையில் அன்பு சிலுவையில் தெம்பு
சிலுவையிலே அரும் வெற்றியாம்
கிறிஸ்து நாதரே } 2

— அனைத்தையும்

3. சிலுவையில் மீட்பு சிலுவையில் வாழ்வு
சிலுவையிலே உத்தானமாம்
கிறிஸ்து நாதரே } 2

— அனைத்தையும்

---

## 97 பல்லவி

பாடுவேன் அல்லேலூயா
இராஜாதி இராஜன் நம்பிரானே
எல்லாம் எனக்கவரே
பின் செல்வேன் என்றென்றும்

சரணங்கள்

1. என் இதயத்தின் கீதம்
நெருக்கம் சங்கடம்
என் வாழ்வின் பிரயாசங்களில்
வழி நடத்தினார் —பாடுவேன்

2. தம் நித்திய சிநேகம் கொண்டு
என்னை அழைக்கிறார்
தம் அருள் மழை பெய்து
என்னைக் காத்தருள்வார் —பாடுவேன்

3. மேலோக நாட்டில் என்னை
அவர் சேர்த்திடுவார்
விண் தூதரோடும் நானும்
என்றும் பிரகாசிப்பேன் —பாடுவேன்

---

98

பல்லவி

எந்தன் இயேசு எனக்கு நல்லவர்
அவர் என்றென்றும் போதுமானவர் } 2
ஆபத்தில் வியாதியில் என்பிரயாசங்களில்
என்றுமே அவர் போதுமானவர் } 2

சரணங்கள்

1. கல்வாரி மலை மேல் ஏறியே
முள்முடி சிரசில் சூடியே எந்தன்
வேதனை யாவையும் நீக்கி என்னில் புது
ஜீவனை ஊற்றினதால் —எந்தன்

2. அவர் ஆதியும் அந்தமுமே
தெய்வ சிநேகத்தின் பிறப்பிடமே
பதினாயிரங்களில் மிகச் சிறந்தவரே
துதிக்கப் படத் தக்கவரே —எந்தன்

3. புவியாத்திரை மிகக் கடினம்
தேவ கிருபைகள் எந்நேரமும்
பகல் மேகஸ்தம்பம் இரா வில் அக்னிஸ்தம்பம்
அனுதினம் என்னை வழி நடத்தும் —எந்தன்

4. எந்தன் ஏக்கம் எல்லாம் நீங்கிப் போம்
கண்ணீர் யாவையும் துடைத்திடுவார்
இயேசு இராஜாவாய் வானத்தில் வெளிப்படும் நாள்
நான் அவருடன் பறந்திடுவேன் —எந்தன்

—O—

99

பல்லவி

என் இயேசுவின் சந்நிதியில் — என்றும்
கீதங்கள் பாடிடுவேன்
என்னைக் காத்திடுமே அவர் நாமமதே
துதி கீதங்கள் பாடிடுவேன் —என்

1. கண்ணீர் அவர் துடைத்திடுவார்
கருணைக் கரம் தாங்கிடுவார்
எந்தன் கல்வாரி நாயகன் இயேசுவாலே
எல்லாப் பாவங்களும் அகன்றிடுமே —என்

2. பரமன் குரல் கேட்கும் போது
பரமானந்தம் அடைந்திடுவேன்
எந்தன் அவசியங்கள் எல்லாம் அவர் கிருபையது
அதி சீக்கிரம் கிடைத்திடுமே —என்

—O—

# 100

1. உள்ளமெல்லாம் உருகுதையா
உத்தமனை நினைக்கையிலே
உம்மையன்றி வேறே தெய்வம்
உண்மையாய் இங்கில்லையே

கள்ளனென்று தள்ளிடாமல்
அள்ளி என்னை அணைத்தவர்
சொல்லடங்கா சேதத்தாலே
உம் சொந்தமாக்கி கொண்டீரே

2. எத்தன் என்னை உத்தமனாக்க
சித்தம் கொண்ட என் இயேசையா
எத்தனையோ துரோகம் நான் செய்தேன்
அத்தனையும் நீர் மன்னித்தீர்

இரத்தம் சிந்த வைத்தேன்
அத்தனையும் என் பாவமன்றோ
கர்த்தனே உம் அன்புக் கீடாய்
நித்தம் செய்வேன் உம் சேவையே

3. வானமீதில் இயேசு ராஜன்
வேகம் வரும் நாளன்றோ
லோகமீதில் காத்திருப்போம்
ஏகமாக கூடிட

தியாக ராஜன் இயேசுவை நாம்
முகமுகமாய்த் தரிசிக்க
ஆவலோடு ஏங்கும் தாசன்
சோகம் நீங்கும் நாளன்றோ.

—O—

**101**

1. இயேசு கிறிஸ்துவின் நல் சீடராகுவோம்
விசுவாசத்தில் முன் நடப்போம்
இனி எல்லோருமே அவர் பணிக் கெனவே!
ஒன்றாய் எந்நாளும் உழைத்திடுவோம்

நம் இயேசு இராஜாவே இதோ வேகம் வாராரே
அதி வேகமாய் செயல்படுவோம்

2. மனிதர் யாரிடமும் பாசம் காட்டுவோம்
இயேசு மந்தைக்குள் அழைத்திடுவோம்
அதி உற்சாகமாய் அதி சீக்கிரமாய்
இராஜ பாதையைச் செம்மையாக்குவோம்

நம் இயேசு ராஜாவே, இதோ வேகம் வாராரே
அதி வேகமாய் செயல்படுவோம்

3. சாத்தானின் சதிகளைத் தகர்த்திடுவோம்
இனி இயேசுவுக்காய் வாழ்ந்திடுவோம்
இந்தப் பார் முழுதும் இயேசு நாமத்தையே
எல்லா ஊரிலும் எடுத்துரைப்போம்

நம் இயேசு இராஜாவே இதோ வேகம் வாராரே
அதி வேகமாய் செயல்படுவோம்

4. ஆவி ஆத்துமா தேகம் அவர் பணிக்கே
இனி நான் அல்ல, அவரே எல்லாம்
என முடிவு செய்தோம் அதில் நிலைத்திருப்போம்
அவர் ... நாளினில் மகிழ்ந்திடுவோம்

நம் இயேசு இராஜாவே இதோ வேகம் வாராரே
அதி வேகமாய் செயல்படுவோம்!

ா—ா

**102** இயேசுவின் குடும்பம் ஒன்று உண்டு
அன்பு நிறைந்திடும் இடம் உண்டு | 2

1. உயர்வுமில்லை அங்கு தாழ்வுமில்லை
ஏழை இல்லை பணக்காரனில்லை
இராஜாதி இராஜா இயேசு
என்றென்றும் ஆண்டிடுவார் —இயேசுவின்

2. பாவ மில்லை அங்கு சாபமில்லை
வியாதியில்லை கடும் பசியுமில்லை
இராஜாதி ராஜா இயேசு
என்றென்றும் காத்திடுவார் —இயேசுவின்

3. இன்பம் உண்டு சமாதானம் உண்டு
வெற்றி உண்டு துதிபாடல் உண்டு
இராஜாதி இராஜா இயேசு
என்றென்றும் ஈந்திடுவேன் —இயேசுவின்

—o—

**103**

தேவனின் ஆலயமே பரிசுத்த ஆலயமே
மகிமையின் ஆலயமே நானே அவ்வாலயமே

சரணங்கள்

1. இயேசுவின் இரத்தத்தால் மீட்கப் பட்டேன்
அவருக்காய் கிரயமாய்க் கொள்ளப் பட்டேன்
தேவனின் ஆவியால் நிரப்பப் பட்டேன் - நான்
தேவ பிள்ளையானேன் அவர் சொந்த ஜனமானேன்
—தேவனின்

2. நான் இனி என்னுடையவனே அல்ல
அவரே என் சரீரத்தின் சொந்தமானவர்
வஞ்சிக்கப் படாமல் தீட்டுப் படுத்தாமல்
பரிசுத்தம் காத்துக் கொள்வேன் பரிசுத்த ஜாதியாக
—தேவனின்

3. கர்த்தருக்குள் என்றும் இசைந்திருப்பேன்
அவருடன் ஒரே ஆவியாயிருப்பேன்
ஆவியினாலும் சரீரத்தினாலும்
மகிமை செலுத்துவேன் கர்த்தருக்கே என்றும்
—தேவனின்

4. இயேசுவின் வருகை நெருங்கிடுதே
அவரின் பிரசன்னம் விரைந்தேகிடுதே
மகிமைமேல் மகிமை அடைந்திடுவேன் நான்
மறுரூபமாகிடுவேன் மகிமையில் சேர்ந்திடுவேன்
—தேவனின்

—O—

104 எண்ணிலடங்கா ஸ்தோத்திரம்
தேவா என்றென்றும் நான் பாடுவேன்

அனுபல்லவி

இந்நாள் வரை என் வாழ்விலே
நீர் செய்த நன்மைக்கே

சரணங்கள்

1. வானாதி வானங்கள் யாவும்
அதன் கீழுள்ள ஆகாயமும்
பூமியில் வாழ்கின்ற யாவும்
கர்த்தா உம்மைப் போற்றுமே
எண்ணி

2. காட்டினில் வாழ்கின்ற யாவும்
கடும் காற்றும் பனி தூரலும்
நாட்டினில் வாழ்கின்ற யாவும்
நாதா உம்மைப் போற்றுமே
—எண்ணி

3. நீரினில் வாழ்கின்ற யாவும் - இந்
நிலத்தின் ஜீவ ராசியும்
பாரினில் பறக்கின்ற யாவும்
பரனே உம்மைப் போற்றுமே
—எண்ணி

4. வால வயதுள்ளானோரும் — மிகும்
வயதால் முதிர்ந்தோர்களும்
பாலகர் தம் வாயினாலும்
பாடி உம்மைப் போற்றுமே
—எண்ணி

—O—

105 புதிய கிருபை அளித்திடுமே
அனுதின ஜீவியத்தில்
கிருபைமேல் கிருபையை அருளிச் செய்து
கிருபையில் பூரணமாகச் செய்யும்

சரணங்கள்

1. ஆத்துமாவே என் முழு உள்ளமே
ஆண்டவரை நீ ஸ்தோத்தரிப்பாய்
தினம் அதிகாலையில் புதுகிருபை
அளித்து நீர் வழி நடத்தும் —புதிய

2. கர்த்தரின் மகிமையை வெளிப்படுத்த
கிருபையின் பாத்திரமாக்கிடுமே
கிருபையினால் உள்ளம் ஸ்திரப்படவே
கிருபைகள் ஈந்திடுமே —புதிய

3. சோதனை வியாதி நேரங்களில்
தாங்கிட உமது கிருபை தாரும்
கிருபையில் என்றும் பெலன் அடைந்து
கிறிஸ்துவில் வளரச் செய்யும் —புதிய

4. சோர்ந்திடாமல் நல் சேவை செய்ய
கிருபையின் ஆவியை ஊற்றிடுமே
நல்ல போராட்டத்தைப் போராட
கிருபைகள் அளித்திடுமே —புதிய

5. பக்தியோடே தேவனையே
பயத்துடனே நிதம் தொழுதிடுவோம்
அசைவில்லா ராஜ்ஜியம் அடைந்திடவே
கிருபையை காத்துக் கொள்வோம் —புதிய

ா—ா

106 அனைத்திலும் உயர் நெறி
அன்பே அன்பே அன்பே
அதனை அனைவரும் ஏற்றிப் போற்றுவோம்

1. மண்ணோர் மொழிகள் பேசிடினும்
விண்ணோர் மொழிகள் பேசிடினும்
அன்பு நமக்கு இல்லையெனில்
ஒலிக்கும் வெண்கல நிலையாவோம்

2. அறிவு அனைத்தும் இருந்தாலும்
மறை நூல் யாவும் தெரிந்தாலும்
அன்பு நமக்கு இல்லையெனில்
நம்மில் ஒன்றும் பயனில்லை

3. மலையைப் பெயர்க்கும் அளவிற்கு
மாண்புறு விசுவாசம் இருந்தாலும்
மனதில் அன்பு இல்லையெனில்
மண்ணில் நமக்கு என்ன பயன்

4. உடமை எல்லாம் கொடுத்தாலும்
உடலைத் தியாகம் செய்தாலும்
அன்பு நமக்கு இல்லையெனில்
நம்மில் நமக்கு என்ன பயன்

107

—o—

நம் தேவன் அன்புள்ளவர் நம் தேவன் பரிசுத்தர்
நம் தேவன் நீதிபரர் நமக்காக ஜீவன் தந்த இயேசுஅவரே

சரணங்கள்

நன்மை ஏதும் ஒன்றும் நம்மில் இல்லையே
என்ற போதும் நம்மை நேசித்தாரே
ஆ...அந்த அன்பில் மகிழ்வோம் | 2
அன்பரின் பாதம் பணிவோம்

2. அத்தி மரம் துளிர் விடாமற்போலும்
திராட்சைச் செடி கனி கொடாமற்போனாலும்
ஆ... அவர் காயம் நோக்குவோம் | 2
அதுவே என்றும் போதுமே

3. வானமீதில் இயேசு இறங்கி வருவார்
தேவதூதர் போல மகிமை அடைவோம்
ஆ...எங்கள் தேவா வாருமே | 2
அழைத்து வானில் செல்லுமே

4. அல்லேலூயா கீதம் நாம் என்றும் பாடுவோம்
ஆண்டவரோடு டென்றும் நாம் ஆளுகை செய்வோம்
ஆ...அந்த நாள் நெருங்குதே | 2
நினைத்தால் நெஞ்சம் பொங்குதே |

—o—

108 துதிப்பதே என் தகுதியல்லோ
துதித்திடுவேன் என் இயேசுவை

1. வேதம் நிறைந்த இதயம் தந்தார்
ஜெபம் நிறைந்த நேரம் தந்தார்
கண்ணீர் நிறைந்த கண்கள் தந்தார்
கருணை நிறைந்த கரங்கள் தந்தார் — துதிப்பதே

2. வியாதி நேரத்தில் வல்லமை தந்தார்
சோதனை நேரத்தில் ஜெயம் தந்தார்
கைவிட்ட நேரத்தில் ஜீவன் தந்தார்
ஆரோக்கிய நேரத்தில் அடக்கம் தந்தார் —துதிப்பதே

3. மனதில் நிறைந்த மகிழ்ச்சி தந்தார்
பார்வை நிறைந்த தூய்மை தந்தார்
சிந்தனை நிறைந்த ஊழியம் தந்தார்
செயல் நிறைந்த திட்டங்கள் தந்தார் —துதிப்பதே

4. ஆபத்து நேரத்தில் அடைக்கலம் தந்தார்
பெலனை நேரத்தில் பெலன் தந்தார்
செய்தி நேரத்தில் தூது தந்தார்
பாடிய நேரத்தில் பரவசம் தந்தார் —துதிப்பதே

5. வளம் நிறைந்த வாழ்வு தந்தார்
மகிமை நிறைந்த தாழ்வு தந்தார்
அன்பு நிறைந்த ஆட்கள் தந்தார்
ஆவி நிறைந்த அறிவு தந்தார் —துதிப்பதே

6. சாட்சி நிறைந்த ஜீவியம் தந்தார்
சத்தியம் நிறைந்த சபை தந்தார்
இயேசுவில் நிறைந்த ஞானம் தந்தார்
ஒளி நிறைந்த வழி தந்தார் —துதிப்பதே

**109**

1 தேவ சேனே வான மீது கோடி கோடியாகத் தோன்றும்
பல கோடி திரள் கூடிக் குகைத் தேடி வேகம் ஓடும்
விண் மீன்கள் ஸ்தானம் மாறிப் பாரெங்கும் வந்து கொட்டும்

அல்லேலூயா அல்லேலூயா
அல்லேலூயா அல்லேலூயா
அல்லேலூயா அல்லேலூயா
அல்லேலூயா அல்லேலூயா

2. ஐந்து கண்டம் தனில் ஆளும் ஆட்சியாவும் அற்றுப்போகும்
இருள் சூழும் இடி முழங்கும் கூச்சல் கேட்டு கண்ணீர் சிந்தும்
தூயர் கூட்டம் சுத்தம் உள்ளம் சாட்சிப் பாடல் எங்கும் கேட்கும்
நாளே ஆடி மிகப்பாடி என் நேசருடன் சேர்வேன்

3. கடல் குமுறும் கரை உடையும் கப்பல் கவிழும் பெரும் நாசம்
போக்குவரத்து யாவும் நிற்கும் இனி உலகம் என்பதில்லே
வாக்கு மாரு வேதம் கூறும் வார்த்தையாவும் நிறைவேறும்
நாளே ஆடி மிகப்பாடி என் நேசருடன் சேர்வேன்.

—O—

**110** உம்மைப் போல் யாருண்டு.
எந்தன் இயேசு நாதா
இந்தப் பார்தலத்தில்
உம்மைப் போல் யாருண்டு?
பாவப் பிடியினில் சிக்கி நான் உழன்றேன்
தேவா தம் அன்பினுல் மன்னித்தீர்

1. உலகம் மாமிசம் பிசாசுக்கடியில்
அடிமையாகவே பாவி நான் ஜீவித்தேன்
நிம்மதி இழந்தேன் தூய்மையை மறந்தேன்
மனம் போல் நடந்தேன், ஏமாற்றம் அடைந்தேன்
என்னையா தேடினீர்
ஐயா இயேசு நாதா

உம்மை மறந்த ஓர் துரோகி நான்
என்னையா தேடினீர்
ஐயா இயேசு நாதா
அடிமை உமக்கே இனி நான்

2. இன்றைக்கு நான் செய்யும் இந்தத் தீர்மானத்தை
என்றைக்கும் காத்திட ஆவியால் நிரப்பும்
நொருக்கும் உருக்கும் உடையும் வனையும்
உமக்கே உகந்த தூய சரீரமாய்
ஐம்பொறிகளையும் உமக்குள் அடக்கும்
இயேசுவே ஆவியால் நிரப்பும்
வெற்றி வாழ்க்கையுள்ள மகனாய் திகழ
அக்கினி என் உள்ளம் இறக்கும்.

3. வீட்டிலும் ஊரிலும் செல்லுமிடமெங்கும்
சோதனை வந்திடில் கர்த்தா நீர் காத்திடும்
மேசியா வருகை வரையில் பலரை
சிலுவைக் கருகில் அழைக்க ஏவிடும்
முழங்காலில் நிற்க, வேதத்தைஅறிய
தினந்தோறும் தேவா உணர்த்தும்
உமக்கும் எனக்கும் இடையில் எதுவும்
என்றுமே வராமல் காத்திடும்.

—O—

111 நேசரன்பைப் பாடுவது தனி இன்பமே
துதி பாடவும் போதாது ஆயிரம் நாவு } 2

1. இயேசுவே என் ஜீவன்
இயேசுவே என் கீதம்
அவரன்பு மாருதது
அவரே என் உத்தம நண்பர்

என்னோடு இருப்பவர் எந்நேரம் இருப்பவர் (2)
என்றென்றும் மாறாதவர்
என் நல்ல துணையுமவர் — நேசரன்பை

2. அவரே என் கன் மலை
அவரே என் நம்பிக்கை
அடைக்கலம் அரணுமவர்
அவரே என் பங்குமாவார் என்றேடு.

—o—

112 பாடுவேன் பாடல் கர்த்தருக்காக
ஜீவனுள்ள மட்டும் பாடிடுவேன் | 2

1. தூதர்கள் பாடிய உன்னத பாடல்
இடையர்கள் கேட்ட புதிய பாடல்
களிப்புடன் மரியாள் தேவனை வாழ்த்தி
பாடிய பாடலும் புதிய பாடல் — பாடுவேன்

2. பாலர்கள் பாடிய ஓசன்ன பாடல்
பவனி வந்த இயேசு ராஜனுக்கே
பரலோக தூதர்கள் ராஜாவை வாழ்த்தி
பாடிடும் பாடல் புதிய பாடல்லும்

—o—

113

தேவாதி தேவனே
உடைந்த கருவியாம்
என்னை உம் கரத்தில்
படைத்தேன் தாழ்மையாய்
இனிய கீதம் தரும்
இன்னிசைக் கருவியாய்
என்றென்றும் உம்மைப்பாட
என்னை நீர் புதுப்பியும் - ஆமென்.

—o—

## 114

ஆசீர்வாதம் வேணும் ஆவியான ஜீவதேவ

1. தேசீக மேலோகமதில் தே திருப்பாதமதில்
செல்ல வல்ல வெல்ல நல்ல — ஆசீர்

2. கண்மணி போலன்புடனே காஸ்பிதயை நண்புடனே
— ஆசீர்
காவா மூவா தேவா வாவா — ஆசீர்

3. அத்தனேனின் பாடுகளை அன்புடனே சிந்தைசெய்ய
ஆசையுள்ள ஆவல் கொள்ள.— ஆசீர்

4. பன்னிரெண்டு சீஷருக்கும் பரிசுத்தாவி கொடுத்த தேவா
பக்தா கர்த்தா நித்தா வா வா —ஆசீர்

5. ஆலயந்தனிலு மது வசனமதைப் போதிக்கின்ற
போதகர் அனைவருக்கும் — ஆசீர்

6. பக்தமுடன் கூடி சுவிசேட மலர் சூடிக் கவி
பாட ஆட தேட நாட — ஆசீர்

7. பூரண விசுவாச ஜெபம் பூந்தயை தியான தவம்
புரிய அரிய வரிய பெரிய — ஆசீர்

8. தாதாவே தான் பணியும் தானடியேன் ஞானமணி
தாசனுக்கு சீசருக்கு — ஆசீர்.

---

## 115

எழும்பிடுவீர் ஓ வாலிபரே
எழுப்பிடுவீர் ஜெய வீரர்களை
பூரண சுவிஷேச இளைஞர் படை
புறப்படட்டும் எங்கும் அணி அணியாய்

1. இயேசுவுக்காய் பெரும் சேனை ஒன்றை
இந்திய நாட்டில் திரட்டிடுவோமே — நாம்
சிலுவை கொடி பிடித்தே — அல்லேலூயா
சீயோனின் பாதை செல்வோம் — எழும்பிடுவீர்

2. கழுகினை மேற்கொள்ள கர்த்தரின் பாதத்தில்
காத்திருந்து புது ஆசீர் பெறுவோம் — நாம்
கழுகினைப் போல் பறந்தே — அல்லேலூயா
கர்த்தரின் சேவை செய்வோம் —எழும்பிடுவீர்

3. இயேசுவின் பின்னே ஓடிடுவோமே
இயேசுவுக்காய் ஜீவன் வைத்திடுவோமே — நாம்
தியாகத்தின் பாதையிலே — அல்லேலூயா
தினமும் நடந்திடுவோம் —எழும்பிடுவீர்

4. ஆவியினால் எப்பொழுதும் நிறைந்தே
ஆவியின் வரங்களை உடையோராக — நாம்
ஆயத்தமாக நிற்போம் — அல்லேலூயா
ஆர்ப்பரித்தே மகிழ்வோம் —எழும்பிடுவீர்

5. எதிரியின் சேனைக்குள் பாய்ந்தே செல்வோம்
எதிரியின் கோட்டைகள் தகர்த்தெறிவோமே — நாம்
எதிரியை வீழ்த்திடுவோம் — அல்லேலூயா
எழுதின பட்டயத்தால் — எழும்பிடுவீர்

6. பாவத்தின் சிறைகளில் வாடிடும் மக்களை
பாவத்திலிருந்தே விடுதலை செய்வோம் — நாம்
பரிசுத்த கூட்டமொன்றை — அல்லேலூயா
பரமனுக்காய் சேர்ப்போம் —எழும்பிடுவீர்

7. எக்காளம் சத்தம் தொனித்திடும் வேளை
எதிர் கொண்டு இயேசு ராஜனை சந்திப்போம் — நாம்
மேகத்தில் ஏறிச் செல்வோம் — அல்லேலூயா
மேதினியை ஆண்டிட -- எழும்பிடுவீர்

—O—

## 116

1. உள்ளத்தில் அவர் பால் பேரன்புள்ளோரெல்லாம்
எண்ணத்தில் தெளிவைப் பெறுவீர்
சொல்லதில் கூறுவீர் வாழ்வதில் சாதிப்பீர்
இயேசு தேடும் நபர் இவரே.

2. பாவன் பேரிலே பற்றுக் கொண்டோர் எல்லோரும்
எளிதில் புரிவார் அவரின் பாரத்தை
உலகின் பேரிலே இயேசுவின் அன்பை
தமதாக்கியவர் வாழுவார் வாழுவார்
உண்மை அடியவர் இயேசுவை அறிவார்
தம்மையே அவர்க்காய் அளிப்பார்

2. தேசங்கள் தீவுகள் பல பிராந்தியங்கள்
பாவத்தால் நிறைந்து சாபமாகிறது
நிரப்பின் வாரீலே நிற்கத் தக்கதாக
தேவன் தேடும் நபர் நம்மிலே யார் யாரோ
உண்மை அடியவர் இயேசுவை அறிவார்
தம்மையே அவர்க்காய் அளிப்பார்.

4. செல்வம், சீர், சிறப்பு, நற்குடிப் பிறப்பு
செல்வாக்கு அந்தஸ்து எடுபடாமல்
மானமும் பேரும் சாவதில் என் செய்வீர்
உலகின் சம்பத்துக் குப்பை என்றே சொல்வீர்
உண்மை அடியவர் இயேசுவை அறிவார்
தம்மையே அவர்க்காய் அளிப்பார்

—o—

## 117

1. காப்பார் உன்னை
என்றென்றும் வழுவாமலே
இம்மட்டும் காத்தார் இம்மானுவேலாய்
இன்னமும் காத்திடுவார் | 2

2. கோழி தன் குஞ்சுகளை
கூவி அழைக்குமாப் போல்
என்னைத் தம் சிறகுகளால்
அணைத்துக் காத்திடுவார் | 2

3. கண்ணீர் கவலையுடன்
கஷ்டம் நஷ்டம் வந்தாலும்
கர்த்தரின் நாமத்தினால்
சகித்துத் தாண்டிடுவேன் | 2

4. சோதனை சோர்வுகளில்
சோர்ந்திடாமல் காக்கிறார்
நெரிந்த நாணலையும் முறியாமலே தேவன்
நிமிர்த்தி உயர்த்திடுவார் | 2

5. இவ்வுலகப் பாடுகள்
என்னை என்ன செய்திடும்
நல்ல போராட்டம் போராடி
ஓட்டத்தை முடித்திடுவேன் | 2

6. ஆனந்தக் கீதங்களால்
ஆர்ப்பரித்து மகிழ்வேன்
அல்லேலூயா பாடுவேன்
அன்பரின் நாமத்தினால் | 2

|O|

1. அல்லேலூயா தேவனுக்குத் துதி மகிமையே
அதிசயமாய் அற்புதமாய் வழி நடத்தினார்
ஒரு நூறு ஆண்டுகள் விந்தையாகவே
இயேசு அருளினால் வளர்ந்து பெருகுகிறோம்

உள்ளத்தில் நன்றியால் நிரம்பிப் பாடுவோம்
வெள்ளம் போல் பெருகிடும் இன்பக் கீதத்தால்
எள்ளளவும் குன்றிடா தேவ கிருபையால்
அகமகிழ்ந்து அல்லேலூயா துதி முழங்குவோம்

2. கொல்கதாவின் தியாக அன்பு உள்ளம் கவர்ந்திட
தொல்லை ஏற்று அன்பர் பலர் தொண்டு புரிந்தனர்
அல்லும் பகலும் இயேசு என்று பேசித் திரிந்தனர்
கல் மனங்கள் கரைந்து உருக உதிரம் சிந்தினர்

3. தேவாலயக் கற்கள் பேசும் தியாக சரிதையும்
திருவனங்கள் அனைத்தும் கூறும் கண்ணீர் கதைகளும்
மேன்மை செல்வம் யாவும் துறந்த அன்புத் தொண்டர்கள்
ஆன்மாக்களின் வேட்கையுடன் மெழுகாய் உருகினர்

4. தியாகத்தால் எழுந்த சபைகள் வளர்ந்து பெருகவும்
கண்ணீரால் வளர்ந்த சேவை சிறந்து விளங்கவும்
நன்னலம் இல் பொருள் என்றென்றும் ஆகிட
தூய்மைத் தொண்டு தொடர நாமும் துதித்து மகிழுவோம்

5. உயர்ந்து நிற்கும் கோபுரங்கள் தொண்டின் மகிமையும்
நிமர்ந்து நோக்கும் நமது சபைகள் பெருமை சேர்த்திடும்
பன்மடங்காய் கிறிஸ்துவர்கள் பெருகி வளர்ந்திட
ஒன்றாய் இணைந்து இயேசுக்காய் என்றும் உழைப்போம்.

# 119

1. ஆயிரம் ஆயிரம் பாடல்களை
ஆவியில் மகிழ்ந்தே பாடுங்களேன்
யாவரும் தேமொழிப் பாடல்களால்
இயேசுவைப் பாடிட வாருங்களேன்

அல்லேலூயா அல்லேலூயா
என்றெல்லாரும் பாடிடுவோம்
அல்லலில்லை அல்லலில்லை
ஆனந்தமாய் பாடிடுவோம்

2. புதிய, புதிய பாடல்களை
புனைந்தே பண்களும் சேருங்களேன்
துதியும் நிறையும் காணங்களால்
தொழுதே இறைவனைக் காணுங்களேன் — அல்லேலூயா

3. நெஞ்சின் நாவின் நாதங்களே
நன்றி கூறும் கீதங்களால்
மிஞ்சும் ஓசை தாளங்களால்
மேலும் பரவசம் கூடுங்களே — அல்லேலூயா

4. எந்த நாளும் காலங்களும்
இறைவனைப் போற்றும் நேரங்களே
சிந்தை குளிர்ந்தே ஆண்டுகளாய்
சீயோனின் கீதம் பாடுங்களே.

**120** **பல்லவி**

தாகம் தீர்க்கும் ஜீவநதி
தரணியில் உண்டோ எனத் தேடினேன்

**சரணங்கள்**

1. அருவின் நீரைப் பருகிவிட்டேன்
ஆற்றினில் ஊற்றையும் பருகிவிட்டேன்
தூரவுகள் கடலோரம் தாகம் தீர்க்கவில்லை
தூரத்துக் கானலாய் ஆகியதே — தாகம்

2. கானகம் சோலையும் தேடியபின்
வானகம் நோக்கியே அபயமிட்டேன்
கண்களைத் திறந்தேன் ஐந்தருவியென
கன்மலை யொன்றில் நீர் சுரக்கக் கண்டேன் — தாகம்

3. பருகியே வாழ்த்தினேன் தாகமில்லை
அருகினில் சென்றேன் கன்மலையுமில்லை
காயங்கள் தன்னில் செந்நீர் சுரக்க
கன்மலையாக என் இயேசு நின்றார் — தாகம்

4. ஐயனின் திருவடி வீழ்ந்தேன் நான்
ஆன்மாவின் தாகமும் தீர்ந்தே சென்றேன்
புன்னகை பூத்த புனிதனும் மறைய
புது பெலனடைந்தேன் என் உள்ளத்திலே — தாகம்

—0—

**121**

உத்தமமாய் முன் செல்ல உதவி செய்யும் யேகோவா
ஊக்கமதைக் கைவிடாமல் காத்து கொள்ள உதவும் (2)

பலவிதமாம் சோதனைகள் உலகத்தில் எமை வருத்தும்
சாத்தானின் அக்னி ஆஸ்திரங்கள் எண்ணா நேரத்தில்
தாக்கும் 2)

தீர்மானங்கள் தோற்காவண்ணம் காத்து சொள்ளஉதவும்
நேர்மையாக வாக்கைக்காக்க வழிவகுத்தருள வேண்டும் (2)

இவ்வுலகமான மாயபுரி அழியப் போவது நிச்சயம்
இரட்சகனே நீர் இராஜவாக வருவது அதி நிச்சயம் (2)

தூதரோடு பாடலோடு பரலோகில் நான் உலாவ
கிருபை செய்யும் இயேசு தேவா உண்மை வழிகாட்டியே (2)

---

## பல்லவிகள்

1. தேவ ஆசீர்வாதத்தோடே
அடியாரை அனுப்பும்
வார்த்தை என்னும் அப்பத்தாலே
போஷித்து வளர்ப்பியும்
இப்போதும்மைத் தேடிவந்து
மனதாரப் போற்றினேம்
மோட்ச லோகத்தில் களித்து
உம்மை வாழ்த்தித் தொழுவோம்

2. என்னைத் தேடிவந்தாரென் நேசர்
சேற்றிலிருந்தென்னை மீட்க வந்தார்
அவரன்பை உணராதிருந்துவிட்டேன் | 2
அவரைத் தேடாமல் வாழ்ந்திருந்தேன் |
எச்சரிப்பின் காலமிதிலே | 2
இயேசுவின் அன்பை ஏற்றுக்கொண்டேன் |

கர்த்தரைத் தேடிடும் காலமிதே
அழைத்திடும் அவர் சத்தம் கேட்டிடுதே
இருதயக் கதவைத் திறவாவிட்டால்
கிருபையின் காலம் முடிந்துவிடும்

4.

1\. எனக்காக உனக்காக இயேசு மரித்தார் (2)
தாமதம் செய்யாதே
இயேசுவண்டை ஓடிவா
எனக்காக உனக்காக இயேசு மரித்தார்

2\. சீக்கிரமாய் இயேசு வந்திடுவாரே (2)
தம்பியே தங்கையே
இயேசுவுடன் வாழுவோம்
சீக்கிரமாய் இயேசு வந்திடுவாரே

5\. அநுதினம் ஜெபித்திடுவாய்
அவரிடம் பேசிடுவாய்
வாசிப்பாய் அவர் வார்த்தையை
நேசிப்பாய் நேசர் அவரை
உன்னை நேசிப்பவர் என்னை நேசிப்பவர்
நம்மை நடத்துவார் அவரே
நாளும் தேடு அவரை (2)

6\. இயேசுவின் அன்பை எடுத்துரைப்போம்
சிறுதீபம் போல ஒளி வீசுவோம் நாம்
இயேசுவின் அன்பை எடுத்துரைப்போம்
காலம் கடந்திடும் டிங் டாங் டிங்

அவ்வேளையிலுமே எந்நிலையிலுமே
அவரே வழி சத்யம் ஜீவன் என்றே நாம்
கை கொட்டிப் பாடுவோம் ஓடியே கூறுவோம்
எல்லையில்லா அவர் அன்பினையே

இயேசுவின் அன்பை எடுத்துரைப்போம்
காலம் கடந்திடும் டிங் டாங் டிங் டிங் டாங் டிங்

7\. இயேசு என் உள்ளத்தில் வந்ததால் ஆனந்தம்
ஆடுவேன் பாடுவேன் என்றுமே இன்பமாய் } 2
என்றும் இன்பமாய்

8. இயேசுவின் சமூகம் பேரின்பமாம் | 2
எல்லையே இல்லா ஆனந்தமாம்
அன்பரின் அன்பை ருசிப்பாயா | 2
துன்பத்தில் நீங்கா நன்பர் அவர்
உள்ளத்தில் அவருக்கு இடமிருந்தால்
உன்னத வாழ்வு கிடைத்திடுமே

9. ஆண்டவரே உந்தன் பாதத்திலே
எந்தன் கை கால்கள் யாவையுமே
காலமெல்லாம் உம் சித்தம் செய்ய
படைக்கின்றேன் ஏற்றுக் கொள்ளும் -ஆமென்

10. எல்லாருக்கும் மா உன்னதர்
கர்த்தாதி கர்த்தரே
மெய்யான தெய்வ மனிதர்
நீர் வாழ்க, வாழ்க, வாழ்க, வாழ்கஇயேசுவே.



நற்செய்தி அச்சகம், பாளையங்கோட்டை

என் ஆத்துமாவே கர்த்தரை ஸ்தோத்திரி என் முழு உள்ளமே அவருடைய பரிசுத்த நாமத்தை ஸ்தோத்திரி.

என் ஆத்துமாவே கர்த்தரை ஸ்தோத்திரி அவர் செய்த சகல உபகாரங்களையும் மறவாதே.

சங்கீதம் 103 : 1-2.

நற்செய்தி அச்சகம், திருவனந்தபுரம் ரோடு; பாளையங்கோட்டை,